www.tamilarangam.net

# சுவடுகள்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE





Foto: Anne Skatvedt

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுவடுகள்

## வாசகர்கள்

## சந்தா

* சந்தா அனுப்பியவர்கட்கு நன்றி. இன்னும் சிலர் சந்தாப் பணத்தை அனுப்பவில்லை. தயவு செய்து சுவடுகளின் சந்தாப் பணத்தை உரிய காலத்தில் அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

* சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகள் வாசகர்களிடம் இருந்து வரவேற்கப்படுகின்றன. அனுப்பப்படும் படைப்புகளின் பிரதியைப் படைப்பாளிகள் தம்முடன் வைத்திருக்குமாறு வேண்டுகிறோம். நடைமுறைச் சிக்கல் காரணமாக பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை.

* உங்கள் நண்பர்களுக்கும் சுவடுகளை அறிமுகம் செய்யுங்கள். சுவடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாக எழுதுங்கள். நாகரீகமான எந்தக் கடிதமும் பிரசுரிக்கப்படும்.

* சுவடுகளின் சந்தா

சகல நாடுகட்கும் 300 குறோணர்களாக (நோர்வே) ஆக்கப்பட்டுள்ளது. சந்தாப் பணத்தை வங்கி ஊடாக மாத்திரமே செலுத்தவும். எமது வங்கிக் கணக்கிலக்கம்: 160752 13062

எமது முகவரி:
SUVADUHAL
Herslebs Gate 43,
0578, Oslo 5

இலங்கையில் தொடர்ச்சியாகப் பல தரப்பினராலும் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. இவை மக்கள் மீதும் தேசத்தின்மீதும் உண்மையான பற்றுதல் கொண்டிராதவர்களாலேயே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்த வன்முறைகளாலும் மனித உரிமை மீறல்களாலும் தேசமும் மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர். இவ்வாறான செயல்களில் இலங்கை அரசு, (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது) இந்திய அரசு, விடுதலைப் புலிகள், ஈபிஆர்எல்எஃப், ஏனைய கொழும்பு இயக்கங்கள் என்பன தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. இது நிறுத்தப்படாமல் தொடர்கிறது.

இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைத்து மக்களதும் கடமையாகும். மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்து வதைபுரியும் கொடுமை இன்றும் தொடர்கிறது.

சகல அரசியல் கைதிகளும் எதுவித நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், சகலதரப்பு மனித உரிமை மீறல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் பகிரங்கமாக வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்குவதில் அக்கறை கொண்ட அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்கவேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது.

1972ஆம் ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய அரசியல் அமைப்பு பற்றியும், இலங்கை குடியரசானதையும் ஒட்டி மே22ஆம் திகதி மாலை ஏழு மணியளவில் தொய்யன் தேவாலயத்தில், சுவடுகள் ஒரு கலந்துரையாடலை நிகழ்த்தவிருக்கிறது. ஆர்வமுள்ள வாசகர்கள், அறிவாளர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

சுவடுகள்

www.tamilarangam.net



# உலகம் முழுவதும்.....,

Illustration by AJIT NINAN



மேற்கு ஐரோப்பிய நாடுகள் இணைந்து தமது பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்யும் முனைப்போடு 'ஐரோப்பிய சமூகம்' ஒன்றைக் கட்டியெழுப்பும் முயற்சியில் பெற்ற வெற்றி உலகின் பல பகுதிகளில் இவ்வாறான முயற்சிகள் தோன்றக் காரணமாயுள்ளன. 'ஐரோப்பிய சமூகம்' இணைந்தது போல பல பிராந்திய சமூகங்கள் அண்மைக்காலங்களில் தோன்றலாம் என்பதற்கான அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. அண்மையில் பல நாடுகளாகச் சிதறுண்ட 'சோவியத் யூனிய'னின் பல குடியரசுகள் மீண்டும் ஒரு பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பைத் தோற்றுவித்துள்ளன. ஆனால் இதன் வெற்றி இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. இதுபற்றி ரஸ்ய அதிபர் பொறிஸ் ஷெல்ட்சீன் அறிவித்தவுடன் இந்தப் பொருளாதார அமைப்பைக் கிழக்கு ஒன்றியம் (East union) எனவும், ஏற்கனவே தோற்றம் பெற்றுள்ள ஐரோப்பிய சமூகத்தை மேற்கு ஒன்றியம் (West union) எனவும் பத்திரிகைகள் அழைக்க ஆரம்பித்தன.

இத்தகைய ஐரோப்பிய சமூகத்தின் உருவாக்கம் உண்மையில் ஜப்பான், அமெரிக்கா ஆகியவற்றுடன் மூலதனம் மற்றும் சந்தையில் போட்டியிடுவதும் லாபம் ஈட்டுவதும் என்பது மறைமுக உண்மை. இதனால் இத்தகைய பொதுச் சமூகத்தின் உருவாக்கம், அமெரிக்காவிற்குச் சந்தோஷம் தரும் விடயம் எனக் கொள்ள முடியாது. இதனால் இந்த அமைப்புக்கு மாற்றீடாக ஏனைய பகுதிகளில் இவ்வாறான ஒன்றியங்கள் அல்லது சமூகங்கள் தோன்றுவதை அமெரிக்கா வரவேற்கிறது. இதன் ஒரு முக்கிய வெளிப்பாடாக அண்மையில் தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றின் கூட்டமைப்பான ஆசியான் (Association of South East Asian Nations) உடன் அமெரிக்கா (கனடா, மெக்சிக்கோவுடன் சேர்ந்து) ஜனவரி மாதக் கடைசியில் சுயாதீன வியாபார ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டமையைக் குறிப்பிடலாம். சிங்கப்பூரில் வைத்துக் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் எதிர்வரும் 15 வருடங்களுக்குச் செல்லுபடியாகும்.

ஆசியான் அமைப்பில் இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், புருணை ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. (ஜே.ஆர் தலைமையில் ஐ.தே.க ஆட்சிக்கு வந்தவுடன் இலங்கையும் இதில் அங்கத்துவம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் இந்தியாவின் கடும் எதிர்ப்பால் அந்த

www.tamilarangam.net







முயற்சி கைவிடப்பட்டது) ஆசியான் அமைப்புடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த வியட்நாம், லாவோஸ் ஆகியவற்றின் நட்பு ஒப்பந்தம் இந்தப் புதிய ஒப்பந்தத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் பெறுபேனானது வியட்நாமை ஆசியானில் நேரடி அங்கத்தவ நாடாக்குவதாகவே இருக்கும். ஏற்கனவே போராலும், கம்பூச்சியப் படையெடுப்பு, அமெரிக்காவின் பொருளாதாரத் தடை போன்றவற்றால் சரிந்துள்ள தனது பொருளாதாரத்தை நிலைநிறுத்த வியட்நாம் தவிர்க்க முடியாமல் ஆசியானில் அங்கத்துவம் பெறும் என எதிர்பார்க்கலாம்.

இந்த ஆசியான் நாடுகள் பவவற்றில் கடந்த சில வருடங்களில் வசதி படைத்தவர்களுக்கும் இடையிலான இடைவெளி பெருமளவு அதிகரித்துள்ளது. பெரிய நகர்களில் கால்வாசிப் பங்கினர் சேரிகளில் வாழ்கின்றனர்.

ஆசியான் நாடுகளில் வருமான வீதம் பாரிய வித்தியாசங்களைக் கொண்டுள்ளது. புருணையிலும், சிங்கப்பூரிலும் (இவற்றில் சனத்தொகை குறைவு) ஒருவரின் சராசரி வருமானம் 10,000 டொலர்களாகும். இந்தோனேசியாவில் இது 555 டொலர்களாகும். பிலிப்ஈபன்ஸில் இது 715 டொலர்களாக உள்ளது.

இது இவவாறிருக்க ஜப்பான் தனது பிராந்தியத்தில் உள்ள தென் கொரியா, தைவான், ஹொங்கொங் ஆகியவற்றை இணைத்து ஒரு புதிய பொருளாதார ஒத்துழைப்புச் சமுகத்தைக் கட்டியெழுப்ப உள்ளது.

இவ்வாறான போக்குகள் அண்மைக்காலமாகப் பல பிராந்தியங்களிலும் உருவாகிவருகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டு தென்னாசியப் பிராந்திய நாடுகளும் தமது பரஸ்பர நலன்கள் பாதிக்கப்படாதவாறு ஒரு அமைப்பைக் கட்டுவது மிக அவசியமானது. ஏற்கனவே உள்ள 'சார்க்', பிரச்சனைகளின் களமாகவே இருந்துவருகிறது. இது நல்லதொரு பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பாக உருவாக்கப்பட்டால் இதன் உண்மையான நோக்கம் நிறைவேறியதாகக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

# சுவடுகள்

இலங்கையின் திக்கற்ற யுத்தத்தில் மிகமோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவிமக்களே. இவர்களே பாதுகாப்புக்கும், உணவுக்கும், அடிப்படை வசதிகளுக்கும் எந்த உத்தரவாதமும் இன்றிப் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான அழிப்பு யுத்தத்தை மக்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, யுத்தம் தனது தீவிரப் போக்கில் சென்றுகொண்டேயிருக்கிறது.

அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு எல்லாம் இழந்த அகதிகள்தான் இந்தியாவில் தஞ்சம் கோரியவர்கள். இவர்கள் இலங்கை ராணுவத்தின் நேரடி நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு, தமது சொந்த ஊரில் வாழ முடியாத நிலையிலேயே நாட்டைவிட்டு உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு உடுத்த துணியுடன் படகுகளில் ஏறி அக்கரையில் தமிழகத்தைப் போய்ச் சேர்ந்தனர். இவர்களின் வாழ்க்கை உயிர்வாழ்தல் மட்டும்தான். இவர்களிடம் எந்தச் சொத்துகளும் இருப்பதில்லை, அதுமட்டுமன்றி உயிர் தவிர இழப்பதற்கும் ஒன்றுமில்லை. இங்கு வசதிகளின் மத்தியில் வாழும் எம்மையும் அகதிகள் என்று பொதுவாக அழைப்பதால், இவர்கள் எந்த நிலையில் அகதிகளாக வாழ்ந்தார்கள் என்பது எமக்குப் புரிய நியாயமில்லை.

1983இல் இலங்கை அரசைத் தனது நோக்கங்களுக்குப் பணியவைக்க முயன்ற இந்திய அரசு, ஈழத்து அகதிகளை வருக வருக என வரவேற்றது. ஆனால் இந்த அகதிகளை வெறும் மந்தைகளை மேய்ப்பதுபோலவே இந்திய அரசு நடாத்திவந்துள்ளது. இவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் போதியதாக இருக்கவில்லை என்பதோடு அவை இந்திய ஊழலில் காணாமற் போய்விட்டன. இந்த நெருக்கடிகளில் அரைவயிற்றோடும், கால்வயிற்றோடும் வாழ்ந்த இவர்கள் பலர் தமது உடலையும் உறுப்புகளையும் விற்றும் சீவிக்கவேண்டிய நிலைமை இருந்தது. ஆனால் அவர்கள் நாடு திரும்ப விரும்பாமைக்கு முக்கிய காரணம், இலங்கையில் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்பதுதான்.

முன்பு அரசியல் காரணத்துக்காக அகதிகளை வரவேற்ற இந்தியா, தற்போதும் அரசியல் காரணத்துக்காக அவர்களை விரட்டியடிக்கிறது. முன்னர் இலங்கையரசை

www.tamilarangam.net

எதிர்த்து நின்ற இந்திய அரசு, தற்போது இலங்கையரசுடன் அனுசரித்துப் போவதால் அகதிகளைத் திருப்பி அனுப்ப முயல்கிறது. இவ்வாறு இந்திய அரசின் காற்பந்தாகும் நிலை லட்சக்கணக்கான ஈழத்து அகதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. தாம் நிர்ப்பந்தம் காரணமாகவே நாடுதிரும்பியதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அகதிகளைத் திருப்பி அனுப்புவதன் மூலம் இந்தியாவும், அதற்கு அனுசரணையாக நடப்பதால் இலங்கையும், நாட்டில் அமைதி நிலவுவதாக ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க நினைக்கின்றன. இது ஐரோப்பிய நாடுகள் தமது அகதிகளைத் திருப்பி அனுப்பவும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும். இலங்கையில் சகல இன மக்களும் அமைதியாக வாழும் நிலை உறுதிசெய்யப்படும்வரை எந்தவொரு அகதியையும் திருப்பி அனுப்புவது அவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. இதுவரை திருப்பி அனுப்பப்பட்ட அகதிகள் தமது சொந்த இடமான வடபகுதிகளைவிட்டுக் கிழக்கில் கொண்டுவந்து சேர்க்கப்பட்டமையும், அவர்கள் இதுவரை வடக்கே கொண்டுசெல்லப்படாமையும் அமைதி திரும்பவில்லை என்பதை அரசே ஒப்புக்கொள்வதைக் காட்டுகின்றன. ஆயினும் அரசு மக்களை யுத்தத்துக்குப் பலிகொடுக்கும் தனது பிடிவாதங்களில் உறுதியாக இருக்கிறது. இந்நிலையில் இந்த அகதிகளுக்கு ஆதரவாக இந்தியாவில் இருக்கக்கூடிய ஆதரவுகளையும், தமிழக மண்ணில் நிகழ்ந்த எமது வன்முறைகள் நாசமாக்கிவிட்டன.

எம்மவரிடையே இந்தத் துர்ப்பாக்கியம் நிறைந்த அகதிகள் பற்றி அதிகம் கவலை வெளிப்படுவதாகத் தெரியவில்லை. ஒருவேளை ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் ஈழத்து அகதிகளாகிய எமக்கு இதே நிலை ஏற்பட்டால் அப்போதுதான் நாம் சிந்திக்கத் தொடங்குவோமோ தெரியாது. ஆனால் அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் எமக்காகக் குரல்கொடுக்க யாரும் முன்வரமாட்டார்கள். எமது சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும் சிந்தை இரங்காத எமது குணத்தை இனியாவதுமாற்றிக்கொள்வோம்.

இந்தியாவில் இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்பவேண்டாம் என அனைவரும் உறுதியாகக் குரலெழுப்புவோம். இதுதொடர்பான நடவடிக்கைகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

சுவடுகள் 34
பங்குனி - சித்திரை

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

சுவடுகள்

www.tamilarangam.net

# சிவரமணியின் கவிதைகள்: விமர்சனத்தின் தற்கொலை



சி.சிவசேகரம்

சிவரமணியின் கவிதைகள் பற்றிச் சிலாகித்துப் பேசி எழுதப்படுகிறது. சில விமர்சகர்களது கருத்துகளில் அவரது கவிதைகளின் உள்ளடக்கமும் அழகியலும் பற்றிய அறிவு தென்படவில்லை. 'சரிநிகர்' என்ற சமூகவியல் மாத ஏட்டில் 1991 பிறபகுதியில் எழுதிய ஒருவர் விஷயஞானமற்ற மரணவிசாரணை அதிகாரி பாங்கில் சிவரமணியின் தற்கொலையை ஆராய முற்பட்டார். ஏறத்தாழ அதே தோரணையில், சித்திரலேகா மௌனகுரு, 1991இறுதியில் சுவடுகள் சஞ்சிகையில் சிவரமணியின் கவிதைகளை அவரது தற்கொலைக்கான காரணத்துடன் பிணைத்து எதையோ வலியுறுத்த முற்பட்டுள்ளார். ஏப்ரல் 1992இல் ஜேர்மனியில் நடந்த இலக்கியச் சந்திப்பில் சிவரமணிக்குத் தெரிவிக்கப்பட்ட அஞ்சலிகட்கு ஒரு வரட்டு மாக்சியவாதியின் ஆட்சேபனைகளைப் பற்றியும் கேள்விப்பட்டேன். தற்கொலை கோழைத்தனமானது, எனவே சிவரமணி கண்டனத்துக்குரியவர் என்பது அவரது வாதத்தின் சாராம்ஸம். இந்தக் கண்ணோட்டத்தில் சயனைடு விழுங்குகிற போராளிகளையும் கோழைகளென்றே நிராகரிக்க வேண்டுமா தெரியவில்லை. என் கருத்தில் தற்கொலையை அதன் சூழ்நிலைகளினின்று பிரித்தெடுத்து மதிப்பிடுவது கிளிப்பிள்ளைத் தனமானது.

இந்த நடுவர்கள் சிவரமணி என்ற கவிஞரை அறிவதிற் கூடிய கவனங் காட்டியிருந்தால் நன்றாயிராதா? சிவரமணி பற்றிய ஆன்மீக, அறநெறித் தீர்ப்புகளைவிட, அவர் எழுதி மிஞ்சியுள்ள சில கவிதைகள் மூலம் அவர் வழங்கும் பார்வையையும் தமிழ்க் கவிதைக்கு அவற்றின் பங்களிப்பையுங் கண்டறிவது தமிழுக்குந் தமிழருக்குங் கூடிய பயனளிக்காதா? நாம் நமது முற்சாய்வுகளின் அடிப்படையிற் கூறுங் கருத்துக்கட்கு மறுமொழியோ விளக்கமோ தரக்கூடிய வாய்ப்பு சிவரமணிக்கு இல்லை. எனவே நாம் செய்யும் மதிப்பீடுகளில் ஓரளவு நிதானம் இருப்பின் நன்றாய் இருக்கும்.

கவிஞர் ஒருவர் பற்றிய கேள்விஞானமின்றி அவரது படைப்பொன்றைப் பார்க்கும் வாய்ப்பு இப்போது இடைக்கிடை நேருகிறது. அவ்வாறு பார்த்தவற்றுள், மனதிற் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியவை சில. சிவரமணி எழுதிச் 'சொல்லாத சேதிகள்' தொகுதியில் வந்து பனிமலரிற் பிரசுரமான

www.tamilarangam.net

கவிதை அவற்றுள் ஒன்று. அவரது கவிதைகள் ஏழோ எட்டோதான் இதுவரை என் பார்வைக்குக் கிட்டியுள்ளன. ('சொல்லாத சேதிகள்' கவிதைத் தொகுதி என் கைக்கு இதுவரை எட்டவில்லை). இந்த ஏழெட்டுக் கவிதைகளை வைத்தே, சிவரமணிக்குத் தமிழ்க் கவிதையுலகில் ஒரு தனியான இடம் உள்ளது என்று சொல்லலாம்.

சிவரமணியின் கவிதைகளிற் புதிய படிமங்கள் உள்ளன, வித்தியாசமான சொற்பிரயோகங்கள் உள்ளன. ஆயினும் அவரது கவித்துவத்தின் அளவுகோல்கள் அவையல்ல. அவரது கவிதைகளின் வலிமை அவற்றின் கருத்துச் செறிவான உள்ளடக்கத்தில் உள்ளது. தமிழிற் புதுக்கவிதையின் தொடக்க நிலையில் படிமக் குவியல்களையே கவிதையாகக் கருதி மயங்கிய ஒரு நிலை இருந்தது. வித்தியாசமான சொற்பிரயோகங்கள், புத்திஜீவித்தனமான புதிர்களைக் கவிதையாக்குவோராலும் புனையப்பட்டுள்ளன. சிவரமணியின் கவிதைகளில் அபூர்வமாகவே இவ்வாறான தன்மைகளைக் காண்கிறேன். அவரது சொற்கள் பெரும்பாலும் தெளிவானவை, நேரடியானவை, எளிமையானவை. அன்றாட நிகழ்வுகளை வெகு சாதாரணமான முறையிற் சொல்லி ஒரு சூழலின் கொடுமையை உணர்த்த அவரால் முடிகிறது. அதிக உதாரணங்கட்கு அவசியமின்றி ஒருசில கவிதைப் பகுதிகளை உங்கள்முன் வைக்கிறேன்.

"ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைக் கனவுகளினதும் அர்த்தத்தை
இல்லாதொழிக்கிறது"

"இரவு முக்கியமானது
நேற்றுப்போல்
மீண்டும் ஒரு நண்பன்
தொலைந்துபோகக்கூடிய
இந்த இருட்டு
எனக்கு முக்கியமானது"

"நடத்தல் எனக்கு இயலாததல்ல
மூன்றாவதாய் எனக்கொரு
பாதம் தேவையில்லை
கைத்தடியைத் தூர எறிந்துவிட்டு
எழுந்து நடக்கத் தொடங்கியிருக்கிறேன்"

இவை ஒவ்வொன்றுமே ஒரு முழுமையான செய்தியைக் கூறுகின்றன. இத்தகைய இறுக்கமான சொல்லமைப்பை அவரது கவிதைகள் ஒவ்வொன்றினதும் முதலிலிருந்து முடிவுவரை காணலாம்.

இயற்கைச் சூழல் பற்றிய ஒருவரது அவதானம் அவரது மனநிலையைப் பிரதிபலிப்பது உண்மை. ஒரு ஆக்கக் கலைஞர் ஒரு மனநிலையையோ ஒரு உணர்வையோ சித்தரிக்க இயற்கையைத் துணைக்கழைப்பது கவிதைக்கு மட்டுமுரியதல்ல. "கத்துங் குயிலோசை" என்ற சொற்றொடரில் மகிழ்ச்சியைப் புலப்படுத்திய சுப்பிரமணிய பாரதி வெளியிற் சுடரும் விளக்கில் மனத்துடிப்பைக் காண்கிறார். சிவரமணியின் "இறந்துபோனவர்களின் கண்களைப் போன்று விளக்கமற்ற அர்த்தங்களை விடுத்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள்" வான்வெளியிற் கண்சிமிட்டிக் கதைசொல்ல ஏன் மறுக்கின்றன? மரங்களின் நிழல்கள் ஏன் கிழிந்து தெரிகின்றன? நிர்க்கதியான நிலையிலுள்ள ஒரு சமுதாயத்தின் அவலத்தின் சித்தரிப்புகள் இவை. இவற்றைவிட 'யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்', 'புத்திசாலித்தனமான கடைசி மனிதனும் இறந்துகொண்டிருக்கிறான்' போன்ற

www.tamilarangam.net

கவிதைத் தலைப்புகளும் அதே அவலத்தைப் புலப்படுத்துவன.

இவை விரக்தியின் வெளிப்பாடுகள் என்று சொல்ல முடியுமா? நம்பிக்கையூட்டக்கூடிய வார்த்தைகளை இன்று எத்தனை ஈழத்துக் கவிஞர்கள் எழுதுகிறார்கள்? 1983முதல் 1987வரை தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றி வளர்ந்த, வளர்க்கப்பட்ட நம்பிக்கைகள் இன்று பெரும்பாலானோரிடம் இல்லை. சேரனும், ஜெயபாலனும், அரவிந்தனும், விஜயேந்திரனும் நம்பிக்கையூட்டும் விதமாக எழுதவில்லை. எத்தனையோ நல்ல பேனாக்கள் ஓய்வெடுத்துவிட்டன. முழு இலங்கையிலும் உள்ள இருண்ட சூழலின் விவரணம் விரக்தியின் வெளிப்பாடல்ல. அவை விரக்தியின் வெளிப்பாடாயின் புதுமைப்பித்தனின் சிறுகதைகளும் விரக்தியின் வெளிப்பாடா? சிவரமணி தன் சூழலின் யதார்த்தத்தை எடுத்துச் சொல்கிறார். அதன் பாரிய பிரச்சனைகளை நமக்கு உணர்த்தும் அதன் தீர்வுகளை முன்வைக்கவில்லை. தீர்வுகள் பற்றிய நிச்சயமின்மையோ நம்பிக்கையீனமோ அதற்குக் காரணமாக இருக்கலாம்; தீர்வுகளை வலியுறுத்த வசதியான சூழ்நிலை இல்லாமை காரணமாக இருக்கலாம்; அல்லது தீர்வுகளை வழங்குமுன் பிரச்சனையைத் தெளிவுபடுத்தும் நோக்கம் காரணமாக இருக்கலாம். 1989க்முன் போராட்ட நம்பிக்கையுடன் எழுதியவைபோல் 1989க்குப் பின், ஏன் எதுவும் எழுதப்படவில்லை என்பதற்கு ஒரு வசதியான விளக்கம் 'விரக்தி'யாக இருக்கலாம். சரியான விளக்கம், அனுபவமும் முதிர்ச்சியுமாகவும் இருக்கவும் இடமுண்டு. சிவரமணி தற்கொலை செய்தார் என்ற அடிப்படையில், அகநிலைச் சார்பாக, எவரும் இவ்விஷயத்தை முடிவுகட்டுவது சரியா?

ஓசை (2 - 4) இல் மறுபிரசுரமான "இருட்டு அவசர அவசரமாக......" என்ற கவிதையில் சூழலின் கொடுமையை உணர்த்தும் சொற்களுடன் சேர்ந்தே திரும்பத் திரும்ப ஒலிக்கின்ற உணர்வு என்ன?

"திசைகள் தறிபட்டு
எல்லைகள் நழுவிப்போய்த்
தொலைவு நீளுகிறபோது
நான் பரிநிர்வாணமாய்
நடந்துகொண்டிருப்பேன்
அனைத்திலும்"

நான் கொளுத்துகிற
மெழுகுவர்த்திகள் அணைக்கப்பட்டாலும்
ஒவ்வொரு விடியலிலும்
தரிசனம் தருகிற ஒரு சூரியன்
என்னுள்ளும் ஒரு சூரியனை
இருத்திவிட்டுப் போகிறது"

இருண்ட சூழலிலிருந்து விடுபட மார்க்கம் காட்டாத சிவரமணி அதற்குச் சரணடைய மறுக்கிறார். அவருடைய கவிதைகளில் ஒரு சமுதாயத்தின் இயலாமை பற்றிய கோபமும், குரூரமான விகாரமடையும் சூழல் பற்றிய கரிசனையும், சகமனிதருக்கு நேருங் கொடுமைகள் பற்றிய துயரமும் உள்ளன. தன்னைப் பற்றிய பரிதாப உணர்வாக இல்லாமற் சமுதாய நிலைமையைப் பற்றிய கூர்மையான அவதானங்களாக அமையும் வலிய சொற்களை விரக்தியுற்ற மனத்தில் விளைப்பது கடினம். ஒரு சமுதாயத்தின் பொதுவான விரக்தியை அவரது கவிதை காட்டுகிறது.

"எல்லாவற்றையும்
சகஜமாக்கிக் கொண்டு
அசாதாரண முயற்சியில்
தூங்கிக்கொண்டும் இறந்துகொண்டும்
இருப்பவர்களிடையே
நான் எனது நம்பிக்கைகளுடன்
தோற்றுக்கொண்டிருக்கிறேன்"

என்ற வரிகள் சிவரமணியின் நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடென்று அடித்துச் சொல்லும் ஒருவர், தன் கவிதை உணர்வை ஒருகணம் ஒதுக்கிவைத்துவிட்டுத் தான் அவ்வாறு சொல்ல முடியும். சிவரமணி சொல்லும் நம்பிக்கைகளின் தோல்வி நம்பிக்கையிழந்தவர் மத்தியில், நம்பிக்கைகளையுடைய சிறுபான்மையாக, அவர்களைத் தன் நம்பிக்கையின் திசையில் ஈர்க்கமுடியாத நிலையைக் குறிக்கிறதே ஒழிய அவரது நம்பிக்கைகளின் இழப்பையல்ல. "தோற்றுக் கொண்டிருக்கிறேன்" என்பதற்கு அர்த்தம் நம்பிக்கைகளை இழந்துபோகின்றமை அல்ல.

சிவரமணியின் பிற்காலக் கவிதைகளில் பெண்ணுரிமை பற்றிய அழுத்தம் இல்லாமைக்குக் காரணம் அச்சூழலில் மனித உணர்வுகளும், மனித உரிமைகளும், மனித இருப்பும் சீரழிவை எதிர்நோக்கியிருந்தமையே என ஊகிக்கிறேன். பெண்களின் அவலநிலையைவிடச், சாதிய ஒடுக்கலைவிட, முழுச் சமுதாயத்தினதும் இந்த அவலம் பல உணர்வுமிக்க படைப்பாளிகளது கவனத்தையும் ஆக்கிரமித்தது. சிவரமணியின் கவனம் தன் உடனடியான சூழலின் நெருக்கடி பற்றியதாக இருந்ததில் அதிசயம் இல்லை.

சிவரமணியின் பெண்ணுரிமைவாதம் நாம் கேட்கும் உயர் - நடுத்தர வர்க்கத்தின் பெண்ணுரிமைப் பிரகடனங்களினின்று முக்கியமான ஒரு வகையில்

## புதிய அர்த்தங்கள்

எனக்கு விசாத்தந்த அதிகாரி
மனைவிக்கு
விசா மறுக்கிறான்.

யாழ்ப்பாண வடலிகளின் நிழலில்
அம்மம்மா
'போய்ச்சேர்ந்து'விட்டாலும்
சென்று திரும்பல்
இயலுமோ சொல்.

ரொறன்ரோவில், லண்டனில்
எனது சதைகளும் இரத்தமும்
ஆன சகோதரங்கள்.

எந்தத் தூதரகத்திலும்
எனது நிறத்தை
நம்பத் தயாரில்லை.

'அகதி' என்ற தமிழ்ச் சொல்லின்
அர்த்தம் தேவை.

நான் விரும்பும் யாரையும் பாராமல்
வெறுப்புமிழும் முகங்களையே
பார்க்கும் விதி எனக்கு.

வேற்றுக் கிரகத்து மனிதனாய்
இந்தப் பூமிப்பந்தில்
வாழும் எனக்கு
'அகதி' என்ற சொல்லின்
அர்த்தம் தேவை.

●

இளவாலை விஜயேந்திரன்
01.05.92

www.tamilarangam.net

வேறுபட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. 'எமது விடுதலையில்' தோழியரையும், தோழர்களையும் சேர்த்துச் சர்வதேச நோக்கிற் போராட்ட அழைப்பு விடுக்கிறார். பெண்கள் தமது ஆடை அலங்காரங்களிற் செலுத்தும் மிகையான கவனத்தையும் அவர் விமர்சிக்கிறார். பெண்ணடிமைத்தனத்தின் முக்கியமான ஒரு அம்சம், பெண் ஆணின் நுகர்வுக்குரிய ஒரு அலங்காரப் பொருளாக இருப்பது என்பதை அவர்,

"ஆடையின் மடிப்புகள்
அழகாக இல்லை என்பதற்காகக்
கண்ணீர் விட்ட நாட்களை
மறப்போம்"
(எமது விடுதலை)

"சரிகைச் சேலைக்கும்
கண்ணிறைந்த காதலர்க்கும்
காத்திருந்த காலங்கள்!
அந்த வெட்கங்கெட்ட
காலத்தின் சுவடுகளை
அழித்துவிடுவோம்"
(வையத்தை வெற்றிகொள்ள)

என்ற வரிகளில் அடையாளங் காட்டுகிறார்.

சாரமற்ற புதுக்கவிதைகள் தமிழில் மலிந்த ஒரு யுகத்திற் செய்நேர்த்தியுடன் ஒவ்வொரு சொல்லையும் அளந்து பிரயோகிக்கும் புதுக்கவிதையாளர் வெகுசிலரே. அவர்களுள் ஒருவரை நாம் இழந்துவிட்டோம். சிவரமணி தானாக வரித்துக்கொண்ட மரணம் நமது கவலைக்கும் கரிசனைக்கும் உரியது. அதன் முக்கியத்துவத்தின் பல்வேறு சமுதாயப் பரிமாணங்களை நாம் அறியுந்தேவை உள்ளது. ஆயினும், அகநிலை முற்சாய்வுடன், சிவரமணியின் கவிதைகளில் அவற்றைக் கண்டறிவதாகப் பாவனை செய்வோமாயின் அவரது கவிதைகளைச் சரிவர விளங்கிக் கொள்வதற்கு இயலாது போய்விடும்.

---

ஆங்கில வருடப்பிறப்பு ஜனவரியிலும், பின்னர் தமிழ் (இந்துக்கள்?) வருடப்பிறப்பு ஏப்ரல் மாதத்திலும் வருகிறது. இதனால் வருடப்பிறப்பு பற்றிக் கதைக்கும்போது இரண்டையும் பிரித்து விளக்கமாகக் கதைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு தனிச் சொற்கள் இருப்பது நல்லதுதானே? இவவளவு எல்லாம் செய்யிற தமிழன் ஏன் இதற்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிக்கிறானில்லை என்று அங்கலாய்த்தார் ஒருவர்.

உடனே அவரது கடி தாங்காத நண்பர் பட்டென்று சொன்னது, "அதைப் புதுவருஷம் எண்டும் இதைப் புத்தாண்டெண்டும் சொல்லித் தொலையும்"

*தீஸன்*

---

## சுமைகள்

நோர்வேயில் வெளிவரும் இன்னொரு புதிய சஞ்சிகை. தொடர்புகள்: SUMAIHAL, Almennings gt 1, 4013 STAVANGER

---

**சமர்**
Boite 188
Bat E
150 Rue Leopold Rechossiere
93300 Aubervilliers
France

---

Sri Lanka:
Chronology of events
1991

Published by Sri Lanka Resource Center, Grensen 18, 0159 Oslo, Norway
(ISBN82-992606-0-4) Price 10US Dollars.

---

அட்டைப்படம்: நன்றி Paa Flukt

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## அகதி

கௌரி எழுதி ரொறன்ரோ சமூக ஆய்வு வட்டம் வெளியிட்டுள்ள நெடுங்கவிதை நூல். விலை மூன்று கனடிய டொலர்கள். முன்னுரை சமுத்திரன், பின்னுரை விமர்சகர் இந்திரன், அட்டை ஓவியம் மூர்த்தி. நூல் வடிவமைப்பு ஜோர்ஜ் குருஷேவ். தொடர்புகள் Social Research Circle, 1477 Eglinton Avenue West, Post Box 3, Toronto, Ontario, M6E 2G6, CANADA.

"கௌரியின் நெடுங்கவிதை ஒரு முக்கியமான சமகாலப் பங்களிப்பு எனக் கருதுகிறேன். கவிஞனின் சுயசரிதைப் பாங்கு இந்தப் படைப்பின் உயிரோட்டத்தைப் பலப்படுத்துகிறது. கவிதையில் பலமாக இழையோடும் சோகமும் ஆத்திரமும் இன்றைய ஈழத்தின் யதார்த்தத்தின் ஒருவகைப் பிரதிபலிப்புகள். புலம்பெயர்ந்த இளம் தமிழர் பலர் எழுதும் கவிதைகளில் ஒரு துன்பியல் தன்மை படர்ந்திருப்பதைக் கவனிக்கலாம். கௌரியின் நெடுங்கவிதை இதற்கு விதிவிலக்கல்ல. சொந்த அனுபவங்களின் துன்பங்கள் அங்கே தமிழ் மக்கள் படும் அவஸ்தைகள் இவையெல்லாம் ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவே 'அகதி'"

\- முன்னுரையில் சமுத்திரன்

www.tamilarangam.net



## சுவடுகள் மீது தாக்குதல்!

ஒஸ்லோவில் நிகழ்ந்த மேதினக் கூட்டத்தைப் பார்வையிடச் சென்றிருந்த சுவடுகள் ஆசிரியர் ஒருவர்மீது, புலிகளின் சின்னங்கள் விற்ற மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வினியோகித்த விடுதலைப் புலிகள் நால்வர், விடுதலைப் புலிகளின் சின்னங்களை (badge) வாங்க மறுத்தமைக்காக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேதினக் கூட்டம் நிகழும் 'உங்ஸ்தூர்க' சதுக்கத்தில் பல ஆயிரக்கணக்கான நோர்வேஜியர்களும், வேற்றுநாட்டவரும் கூடியிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இச்சம்பவம் நிகழ்ந்த இடத்தின் அருகிலிருந்த நோர்வேஜிய மக்கள் சம்பவம் பற்றித் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

சுவடுகள்மீது நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கான தார்மீகப் பொறுப்பை இங்குள்ள புலிகள் ஏற்கவேண்டும்.

மக்கள் மீதான வன்முறைகளை நாம் தொடர்ச்சியாகக் கண்டித்து வந்துள்ளோம். இங்கு வாழும் ஒவ்வொரு தமிழர்களதும் சட்டவிரோத நடவடிக்கைகளும், வன்முறைகளும் இந்த நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் எமது சமூகத்தைப் பெருமளவில் பாதிக்கக்கூடியன. தாம் கொண்டிருக்கும் அரசியற் கருத்துக்காக எவராவது தாக்கப்படுவது, மற்றவரின் கருத்துக்கு மதிப்பளித்து அமைதியான வழிகளில் ஜனநாயகம் பேணும் நோர்வே நாட்டவரின் மனதில் தமிழர் பற்றி மிக மோசமான அபிப்பிராயயத்தை ஏற்படுத்தும். இவ்வாறான சம்பவங்கள் நடக்காது பாதுகாப்பது ஒவ்வொருவரதும் தனிப்பட்ட கடமையுமாகும். ஏற்கனவே வன்முறைகள், மோசடிகள் நிறைந்த ஒரு சமூகமாக அறியப்படுகிற எமது சமூகம் மேலும் மோசமாகப் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமெனில் நாம் மிகப் பொறுப்புடனும், ஜனநஏயக வழிகளுடனும் நடந்துகொள்ள வேண்டும். பொது அமைப்புகளும் அரசியல் அமைப்புகளும் இது தொடர்பாக மிக அவதானமாகத் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது விருபபம்.

கருத்துகளால் மாத்திரமே யாரையும் வென்றெடுக்க முடியும், வன்முறையாலல்ல என்பதை இச்சமயத்தில் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

**சுவடுகள்** ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்ப்பாண 'அடி' யாருக்கு லாபம்?

பிரம்மா

யாழ்ப்பாணம் அடி எப்போது விழும் என இன்று பலரும் கேட்கிறார்கள். எப்போது அது நடக்கும் என்பதை நோக்குவதை விட யாழ்ப்பாணக் கைப்பற்றலில், சிங்கள-பௌத்த வாதத்திற்கும், பிரேமதாசாவிற்கும், இராணு வத்திற்கும், இந்தியாவிற்கும் உள்ள பல்வேறுபட்ட கருத் தோட்டங்களையும் திரை மறைவிலான இராசதந்திர நாடகங்களையும் அவதானிக்க வேண்டியுள்ளது. பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்.

அ. யாழ்ப்பாணத்தின் மையத்தைக் கைப்பற்றிவிட்டால் வட கிழக்கில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் புலி இயக்க உறுப்பினர்களின் மனோ நிலையில் ஒரு பெரும்பாதிப்பு ஏற்படும். இதனால் ஒரு இராணுவ இயக்கத்திற்கு தேவையான மனோஉறுதி (Morale) குலைந்துவிடும்.


ஆ. புலிக்கெதிரான ஏனைய இயக்கங்கள் யாழ்ப்பாணத்தின் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்படும்போது (Unlea shed என்கிற பதம் பயன் படுத்தப்பட்டது) புலிகள் இலகுவாக இனங்காணப்பட்டு அழிக்கப்படுவார்கள். இதன் காரணமாக 1987 யூலைக்கு முன்பிருந்த நிலை மீண்டும் ஏற்படுவதை இம்முறை தடுக்கலாம். ஓரிரு கெரில்லாத் தாக்குதல்களைத் தவிர புலிகளால் குடாநாட்டினுள் வேறொன்றும் செய்ய முடியாத அளவிற்கு ஏனைய இயக்கங்கள் மக்கள் மத்தியில பரவி விடுவர். தமிழ் நாட்டிற்குப் புலிகள் செல்ல முடியாமல் உள்ளமை இதற்கு இன்னும் சாதகமாக அமையும்.

இ. புலிகள் இயக்கத்தில் சேருவோரின் வயதெல்லை துரிதமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. தற்போது சேருபவர்கள் பெரும்பாலும் சிறுவர், சிறுமியரே. புலிகளின் விசா முறை யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றுவதோடு நீக்கப்படுமானால் இச்சிறுவர் சிறுமியரின் பெற்றோர் அவர்களை குடா நாட்டை விட்டு வெளியே கொண்டு போய்விடுவர். எனவே புலிகளின் ஆட் பலத்தில் மாபெரும் வீழ்ச்சி

www.tamilarangam.net

ஏற்படும். மேலும் புலிகள் யாழ்ப்பாணம் வீழ்ச்சியடைந்த பின்னர் தமது போர் பிரசாரத்தையும், வீரப்பாடல்களை ஒலிபரப்புவதையும் கைவிட வேண்டி வரும். இதனால் தமிழ் ஈழப்போராட்டத்தில் மக்களுக்கு நாட்டம் குறைந்துவிடும்.

இங்ஙனமாகப் பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் கூறுகின்ற கருத்துக்கள் யாவும் புலிகள் இனி 1987க்கு முற்பட்ட ஒரு நிலைக்குத் திரும்பமுடியாது என்பதை அடிப்படையாகக் கொண்டவை யாகும். இன்னொரு முக்கியமான கருத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது பிரபாகரன் இன்று ராஜீவ் கொலை வழக்கில் முக்கியமான குற்றவாளியாகக் காணப் பட்டுள்ளதால், பிரபாகரன், இனி என்றும் அரசியல் அந்தஸ்துப் பெற முடியாது. ஆகவே பிரபாகரன் புலிகளின் தலைவராக இருக்கும்வரை



புலிகள் அரசியல் அங்கீகாரம், அதிகாரம் பெற்று ஒரு நிலைக்கு வருதல் என்பது முடியாத காரியம். சாதாரண புலிகள் போராடுவது, என்றோ ஒரு நாள் தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வரலாம் என்பதற்காகத்தான். ஆகவே பிரபாகரன் தமக்குத் தலைவராய் இருக்கும் வரை தமக்கு எந்த எதிர்காலமுமில்லை என உணரத் தலைப்படும் போது பிரபாகரனுக்குக் கீழ் உள்ளவர்கள் தங்கள் தலைவரைக் கொன்றுவிடுவார்கள் அல்லது இச்சிக்கலை உணரும் பிரபாகரன் தானே சயனைட்டை உட்கொண்டு 'குளோஸ்' ஆகிவிடலாம். (மேற்கண்ட கருத்தை கூறும் ஒருவர் சில சிங்கள சோதிடர்களும்- பிரபாகரன் இந்த வருட முடிவிற்குள் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொள்ளக்கூடும் என்று ஆருடம் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை)

யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவது பற்றி மேற்கண்ட கருத்துக்களை

## நிகழ்வுகள்

* ஒஸ்லோத் தமிழ்ச் சங்கம் நடாத்திய புதுவருடவிழா அண்மையில் சிறப்பாக நடந்தது.

* தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம் நடாத்திய புதுவருட விழா மே மாதம் 2ம் திகதி நடைபெற்றது.

* மேதின விழாவில் புலிகளின் ஊர்வலம் ஒன்று இடம்பெற்றது. இதில் சிறுவர் சிறுமியர் கலந்துகொண்ட கலாசார நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெற்றது.

* நோர்வேயில் அதிக விற்பனையாகும் 'வேகே' (VG) பத்திரிகையில், இங்குள்ள இரு தமிழர்கள் புலிகளால் தாங்கள் மிரட்டப்படுவதாகவும், மிரட்டல் மூலம் பணம் சேகரிக்கப் படுவதாகவும் மற்றும் பல தகவல்களையும் தெரிவித்துள்ளனர். இவர்களது சொந்தப் பெயர், படங்களுடன் இருபக்கச் செய்தி வெளியாகியுள்ளது.

இதே பத்திரிகையில் புலிகள் சர்வதேச ரீதியில் ஆட்கடத்தல் செய்வதாகவும் இருபக்கச் செய்தி வெளியாகியுள்ளது.

---

பிரேமாவின் இராணுவ ஆலோசகர்கள் சிங்கள பௌத்த இனவாத அமைப்புகளுக்கும் தெரிவிக்கிறார்கள். இன்று இராணுவம் பிரேமாவுடன் கொண்டுள்ள தொடர்பைவிட பௌத்த பீடங்களுடன் கொண்டுள்ள உறவு மிக நெருக்கமாக உள்ளது.(அண்மையில் இராணுவத் தலைமைபீடம் சிங்கள பாதுகாவற் பேரணித் தலைவருக்கு சம்பந்தியாகி உள்ளது புறக்கணித்து விடக்கூடிய ஒரு விடயமல்ல) இராணுவத்திற்கும்,

பௌத்த பீடங்களுக்கும் (குறிப்பாக மல்வத்தை) சிங்கள பௌத்த அமைப்புகளுக்கும் இடையில் உருவாகியுள்ள இறுக்கமான உறவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தீவிர முயற்சியில் கொழும்பில் உள்ள இந்திய அதிகாரிகள் இறங்கி யுள்ளனர். இந்தியா இன்று ஏற்படுத்தியும், பலப்படுத்தியும் வரும் இந்தப் புதிய உறவு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும்

பெரும் குந்தகமாக அமையலாம் என்பதைப்பற்றி டெல்லி கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இந்திய அரசு அதிகாரிகள் இலங்கை அரசிற்கும், புலிகளுக்கும் இடையில் ஒரு யுத்தநிறுத்தம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் குறியாக இருக்கின்றனர். புலிகளுக்கும் பிரேமாவிற்கும் எதிர்பாராத உறவு ஏற்பட்டு விடாமற் தடுப்பதற்குத் தனக்கு இருக்கும் ஒரேவழி இராணு வத்திற்கும் சிங்கள பௌத்த வாதிகளுக்கும் உள்ள உறவை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதேயாகும் என இந்தியா கணக்குப்போடுகிறது. இதனால் தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது பற்றியும் தமிழரின் உயிர்பாதுகாப்புப் பற்றியும் இந்தியா மூச்சுவிட விரும்பவில்லை. தமிழர் எதிர்காலத்தைப் பற்றி முன்பு மாதந்தவறாமல் அறிக்கை விட்ட **டெல்லி இன்று அதைப்பற்றி மௌனம் சாதிப்பதன் மூலம் சிங்கள பௌத்த வாதிகளையும், இராணுவத்தையும் தன்பக்கம் கவர்ந்தெடுத்து இலங்கை**

www.tamilarangam.net

*அதோ போறாரே பீதாம்பரம், பெரிய புரட்சியாளர் போலை கிடக்கு...., மேதினம் வருகுதாம்.... எவ்வளவு சந்தோஷமான நாள் எண்டு சொல்லிப்போட்டுப் போறார். கஷ்டப்படும் தொழிலாளர்கள்மீது அவருக்கு எவ்வளவு அக்கறை... இப்பிடியெல்லோ இருக்கவேணும்."*

*"நீர் ஒண்டு... அவருக்குத் தொழிலாளர்களிலையும் அக்கறை இல்லை. கவலைப்படுகிறவரும் இல்லை. மேதினத்திலை ரெட்டைச் சம்பளம் கிடைக்கும் எண்டுதான் சந்தோசப்படுகிறார். காசேதான் கடவுளடா"*

தேவநம்பி

**அரசியலில் தனக்குச் சாதகமாகக் காய் நகர்த்த முற்படுவது முக்கியமான ஒரு திருப்பமாகும்.**

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் மையத்தைக் கைப்பற்றுவதனால் குறைந்தபட்சம் பத்தாயிரம் பொதுமக்களாவது கொல்லப்படலாம் எனவும் இதற்கு இந்தியா ஆட்சேபனை தெரிவித்தால் தமது குடாநாட்டுப் பிரவேசம் பின்னடையலாம் எனவும் இராணுவத் தலைமைப்பீடம் சிலமாதங்களுக்கு முன்னர் (யாழ்ப்பாண 'அடி'க்கான தயாரிப்புகள் ஆரம்பமான வேளையில்) கவலை கொண்டிருந்தது.**

இதன்காரணமாக இராணுவத் தளபதிகள் சில தூதர்கள் மூலம் இந்திய அதிகாரிகளின் கருத்தறியும் முயற்சியில் இறங்கினர். இந்த தூதர்களிடம் இந்தியா சூசகமாகத் தெரிவித்தது என்ன? குடாநாட்டில் பொதுமக்கள் உயிரிழப்பைப் பற்றி நாங்கள் குரல் எழுப்பப் போவதில்லை என்றும், யாழ்ப்பாணம் கைப்பற்றப் படுவதற்கான மறைமுகமான அனைத்து உதவிகளும் செய்யலாம் என்றும் இந்தியத் தரப்பிலிருந்து எடுத்துரைக்கப் பட்டது. இதன் காரணமாகத் தான் இன்று குடாநாட்டில் பொதுமக்கள் பத்தாயிரம் என்ன, ஒரு லட்சம் அழித்தொழிக்கப் பட்டாலும் காரியத்தை முடிக்கலாம் என இராணுவம் நம்பிக்கை பெற்றுள்ளது.

தமிழ் இன அழிப்பிற்கு எதிராக உலகில் எழக்கூடிய ஆட்சேபக் குரலை யோ அனுதாபக் குரலையோ, இந்தியா அமுக்கிவிடும் என்கிற நம்பிக்கையை இன்று இராணுவம், பௌத்த பீடம், பேரினவாத இயக்கங்கள் ஆகியவற்றின் மத்தியில் டெல்லி ஏற்படுத்தியுள்ளது. சிங்கள முரட்டுப் பேரினவாதம் இன்று கட்டற்றுப் பீறிட்டெழும் காரணம் இதுதான்.

குடாநாட்டில் நடைபெறக் கூடிய ஒரு இனப்படுகொலையை உலக அரங்கில் மூடிமறைப்பதற்கு இந்தியாவிற்குச் சாதகமாக இன்று புலிகளின் சில நடவடிக்கைகள் **அமைந்துள்ளன. புலிகள் ஏனைய இயக்கங்களைக் கொன்றொழிப்பதே தம் நோக்கம் எனப் பிரகடனப் படுத்துவதும், முஸ்லீம்களை கொலை செய்தும், இருப்பிடங்களைவிட்டு விரட்டி யடிப்பதும், சர்வதேச அரங்கில் தமிழ் இனப் படுகொலைக்கு எதிராகக் குரல் எழுப்பும் நடுநிலை அமைப்புகளுக்கும் , நாடுகளுக்கும் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன. தமிழர் மத்தியில் உருவாகக்கூடிய, தமக்கு கண்மூடித்தனமாகத் துதிபடாத அனைத்து சக்திகளையும் கொன்றொழிக்க வேண்டுமெனப் புலிகள் வெளிப்படையாகவே கூறித் திரிவது தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைப் போராட்டத்தையே நசுக்கிவிடக்கூடிய சாதகமான சூழ்நிலையை இந்தியாவிற்கு**

www.tamilarangam.net

உருவாக்கிக்கொடுத்துள்ளது.

வீரியமாகவும், தனித்துவமாகவும் இயங்கக்கூடிய தமிழ்த்தேசிய உணர்வு தன் ஒருமைப்பாட்டிற்கு 1916ம் ஆண்டிலிருந்து (தென்னிந்திய நலஉரிமைச் சங்கம்– திராவிட இயக்கத்தின் முன்னோடி- தொடங்கப்பட்ட வருடம்) பெரும் ஆபத்தாக இருந்துவருகிறது என்பதை மனதில் கொண்டே டெல்லி செயல்படுகிறது. இதன் காரணமாகவே இந்தியா இன்று சிங்களப் பேரினவாதத்தோடு கைகோர்த்தேனும் தமிழ்த் தேசியத்தைக் காயடித்து விடலாம் என எண்ணுகிறது.

பிரேமதாசா இன்று தோன்றியுள்ள சர்வதேச சூழ்நிலையில் தனது ஆட்சியைப் பலப்படுத்து முகமாக ஜனநாயகப்படுத்தல் வேலைகளில் இறங்கி, பத்திரிகைச் சுதந்திரம், ஆட்கடத்தல் பற்றிய விசாரணைக் கமிஷன் நியமனம், அரசியற் கொலைகள், கடத்தல்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட பொலீஸ் இராணுவ விஷேட பிரிவுகளை கலைத்தமை ஆகிய காரியங்களைத் துரிதமாகச் செய்து அல்லது செய்வதுபோல் காட்டிச் செயல்படுவது கண்கூடு. இதேவேளை புலிகள் சர்வதேசச் சூழலை உணராமல் இயங்குவதும், தாம் கேட்கவிரும்பும் கருத்துக்களை மட்டுமே துதிபாடிகளின் மூலம் கேட்பதும், தமிழர் தேசிய உரிமைப் போராட்டத்தை கூண்டோடு கைலாசம் அனுப்பக்கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கிறது என்பதைப் புலிகள் உணரவில்லை. எனவே இந்தியாவின் ஆசீர்வாதத்தோடு நிகழப்போகும் குடாநாட்டின் மையத்தை நோக்கிய இராணுவத் தாக்குதலையும் அங்கு பொதுமக்கள் அழிவையும் உலக சமூகம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறது. புலிகள் நசுக்கப்படவேண்டிய ஒரு பயங்கரவாத இயக்கம். அவர்கள் ஒரு இராணுவ இயக்கமல்ல என்றும் அவர்கள் இன்றும் ஏனைய இயக்கங்களை நசுக்கும் தனிநபர் கொலைகள், முஸ்லீம்களுக்கு எதிரான இனஅழிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபடுவதால் அவர்கள் ஒரு சமூக விரோதக் கும்பல் என்றும் ஆகவே தமிழர் பெருவாரியாக அழிந்தொழிந்தாலும் புலிகள் அழிக்கப்படவேண்டும் என டெல்லி சர்வதேச சமூகத்தினர் மத்தியில் பிரச்சாரம் செய்கிறது. புலிகள் சில ஜனநாயகப் பண்புகளையேனும் வெளிப்படுத்தும் வரை இந்தியாவின் இப்பிரச்சாரத்தை தம் நாடுகளால் எதிர்க்கவோ, குடாநாட்டில் நிகழக்கூடிய இனப்படுகொலையைத் தடுக்கும் வகையில் குரல் எழுப்பவோ முடியாதிருப்பதாக கொழும்பில் உள்ள சில மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர்.

இயக்கங்கள் அழிந்தபின் மீண்டும் தாமே அரசோச்சலாம் என கொழும்பில் தமது குளிரூட்டப்பட்ட காரியாலயங்களில் இருந்துகொண்டு கனாக்காணும் கூட்டணி வக்கீல்களும் அவர்களது கையாட்களும் ஒன்றைக் கவனிக்கத் தவறுகின்றனர். இந்தியாவும் சிங்கள இராணுவமும், பௌத்த பீடங்களும், சிங்கள இனவாதக்குழுக்களும் இன்று தம்மிடையே ஏற்படுத்தியுள்ள கூட்டு யாழ்ப்பாணம் வீழ்ந்த பின்னர் தமிழ்த்தேசியத்துக்கே குழிதோண்ட முற்படும் என்பதே அது.

பெரியாரும், அண்ணாவும், தந்தை செல்வாவும், இயக்கங்களின் ஆரம்பகால இலட்சியங்களும் கட்டிவளர்த்த பகுத்தறிவு வாதத்தையும், தமிழ்த் தேசிய பண்பாட்டையும், உரிமைப்போரையும் இந்திய உபகண்டத்தின் தென் கோடியிலிருந்து அழித்தொழிக்க இந்தியா செய்யும் சதிகளை யாழ்குடாநாட்டில் நிகழப்போகும் பாரிய உயிரழிவின் பின்னராவது தமிழர் உணர்ந்து கொள்வார்களா?

நன்றி: சரிநிகர்,

www.tamilarangam.net



## மன்னிப்புச்சபையின் கண்டனத்துக்குள்ளாகும் ஐரோப்பிய நாடுகளின் அகதிகள் கொள்கை




ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வரும் அகதிகள் தொகை தொடர்பாக தேவையற்ற பிரச்சனைகளை ஐரோப்பிய நாடுகள் ஏற்படுத்தி வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது. அகதிகள் விடயம் தொடர்பாக பொதுவான ஒரு கொள்கையை ஐரோப்பிய நாடுகள் கடைப்பிடிக்க இருப்பதால் எதிர்காலங்களில் இவ்விடயங்களில் கடும்போக்கு கடைப்பிடிக்கக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னிப்புச்சபை இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளின் அரசாங்கங்களைக் கண்டிப்பதில் ஐரோப்பிய நாடுகள் பின்நிற்பதுடன், தமது கடமைகளில் இருந்தும் தவறிவிடுவதாகக் கூறியுள்ளது. தமது தாய்நாடுகளில் இருந்து அச்சம் காரணமாக வெளியேறும் அகதிகளுக்கு, அவர்களிடம் தகுந்த காரணங்கள் இருந்தாலும் நாடுகளில் உட்புக அனுமதி மறுக்கப்படுகிறது. பல ஐரோப்பிய நாடுகள் அகதிகளைச் சட்டவிரோதக் குடியேற்றக்காரராகவே பார்க்கின்றன. அகதிகள் தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படும் சட்டங்கள் அகதிகளைப் பற்றித் தெரிந்துகொள்ளப் போதிய விளக்கங்கள் கொண்டிருப்பதில்லை. மன்னிப்புச் சபையின் நேரடிக் கண்டனத்தை பிரித்தானிய அரசு பெற்றுள்ளது. அகதிகளை ஏற்றிவரும் விமானங்கள்மீது தண்டப்பணம் அறவிடும் பிரிட்டனின் செயல் மனிதாபிமானமற்றது எனக் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அகதிகள் தொடர்பாகத் தம்மால் தயாரிக்கப்பட்டுள்ள பத்து அம்சக் கொள்கைகளை ஐரோப்பிய நாடுகள் கட்டாயம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதுவே அகதிகள் நீதியான முறையில் நடத்தப்பட உதவும் எனவும், பிழையான அணுகுமுறைகள் கையாளப்படும் போக்கு ஏனைய நாடுகளுக்கும் பரவலாம் எனவும் அறிக்கை தெரிவிக்கிறது.

www.tamilarangam.net

# சுவிட்சர்லாந்தும் கார்த்திகைத் தீபங்களும்

**விசாகன்**



சுவிஸ் நாட்டின் பேர்ண் நகரில் நிகழ்ந்த *'கார்த்திகை தீபங்கள்'* எனும் கலை நிகழ்ச்சியை அண்மையில் வீடியோ மூலம் பார்க்கக் கிடைத்தது. ஐரோப்பிய நகரங்களில் மட்டுமன்றி ஈழத்திலும் நிகழும் பல கலை நிகழ்ச்சிகளை வீடியோ பதிவுகளாக்குவதன் மூலம் பார்க்கக்கூடிய வாய்ப்பைப் பரவலாக்குதல் ஒரு நல்ல அம்சம். அந்தவகையில் இந்த வீடியோ பதிவும் வரவேற்கத்தக்க அம்சமாக, தொழில் ரீதியாக கணிசமானளவு சிறப்பாகவே உள்ளது. ஆயினும் மேடை நிகழ்வுகளை வீடியோ பதிவாக்குகையில் ஏற்படும் பிரச்சனைகள் இதிலும் நிகழ்ந்துள்ளன. (சில இடங்களில் போதிய ஒளி, ஒலி இன்மை, காட்சிகளின் தேவைக்கேற்ப அண்மைய, தொலைப் பதிவுகள் என்பன அமைந்திராமை) இவ்வாறான தவறுகள் பல ஒத்திகைகளின்போது வீடியோ பதிவாளர்கள் உடனிருந்து அவதானிப்பதன் மூலம் கணிசமானளவு தவிர்க்கப்படக்கூடியவை.

இனி நிகழ்வுகளைப் பார்ப்போம். முதலாவதாகக் கவியரங்கு, இதில் பல கவிஞர்கள் கலந்துகொண்டு சமூகத்தில் நிலவும் பல பிரச்சனைகளைத் தமது கவிப்பொருளாக்கி மக்களுக்கு வழங்கினர். இது ஒரு நல்ல அம்சமே. ஆனால் சில கவிதைகள் சற்றே நீண்டு பொறுமையைச் சோதித்தன. கவிதைகள் மிக நீளமாக அமைகையில் அவை தமது நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விடுகின்றன. கவிதைகள் மேடையில் ஒரு நபரால் வாசிக்கப்படும் சமயங்களில் அவை செறிவாகவும், நயமாகவும் இருத்தல் அவசியம். இல்லாவிடில் அவை பார்வையாளர்களைக் களைப்படையச் செய்துவிடும். வழமையான ஒரே தலைப்பில் பல கவிஞர்கள் கவிதை வழங்குவதைத் தவிர்த்து ஒவ்வொருவரும் தனித்தனித் தலைப்புகளில் கவிதை படித்தமை சிறப்பான அம்சம். இது பல கவியரங்கங்களுக்கு ஒரு முன்னுதாரணம்.

www.tamilarangam.net

தொடர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப்பிஞ்சுகளின் எதிர்காலம் பற்றிய ஒரு விவரண உரை நிகழ்ந்தது. இது தமிழ்க் குழந்தைகள் வெளிநாடுகளில் படும் அவஸ்தை பற்றிய தகவல்களை சுவிஸ் பின்னணியில் விளக்கியது. ஆனால் இந்தப் பின்னணி சகல ஐரோப்பிய நாடுகளுக்கும் பொதுவானது என்றே கூறலாம். இந்த நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாகவும் பார்வையாளர்கள் பலர் அறியாத, அறிந்துகொள்ள விரும்பாத விடயங்களைத் தொடுவதாயும் அமைந்தது. இந்த நிகழ்ச்சி ஒரு தனி உரையாக இருந்திருப்பின் அது பலரது கவனத்தை ஈர்த்திராது. ஆனால் இந்த உரையை நிகழ்த்தியவர் தனது உரையை ஒரு வகுப்பில் பாடம் நடத்துவது போல மிகச்சிறப்பாக அமைக்கப்பட்ட படவிளக்கங்களுடன் 'ஒளி எறிகை' மூலம் திரையிலும் காட்டிப் பார்வையாளர்களின் கவனம் வேறு பக்கம் சிதறாவண்ணம் பார்த்துக்கொண்டார். இன்றைய காலகட்டத்தில் பெருமளவில் எமது இளைய சமூகம் புலம் பெயர்நதுள்ள சூழலில் பலராலும் கவனிக்கப்படாமல் விடப்பட்ட இந்த விடயம் பற்றிச் சிந்திக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தியமை ஒரு சிறப்பான அம்சம். ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் இந்த விடயம் பற்றிய அறிவைக் கொண்டிருப்பதில்லை என்பது ஒரு துக்கமான விடயம். இதுபற்றி எந்த அறிவும் இல்லாததால் இந்தச் சமூகத்தில் ஒன்றுமறியாத ஒரு குழந்தை எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத நிலையில் பல பெற்றோர்கள் திண்டாடுவதைப் பார்க்கலாம். இந்த நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளைப் பலரிடையே விவாதத்திற்குள்ளாக்கி அதுபற்றிய மேலும் செழுமையான கருத்துகளையும் உள்ளடக்கி ஒரு நூலை வெளியிட்டால் ஐரோப்பியத் தமிழ்ப் பெற்றேர்களுக்கு அது மிகப் பயன்தரக்கூடியது என்பது எனது அபிப்பிராயம்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து நாடகம் 'எமதர்மராஜன்' என்ற தலைப்பில் மேடையேறியது. முதல் காட்சி, தேசத்தை நடுவில் நிறுத்தி அதனைச் சுற்றி ஏற்படுகின்ற பிரச்சனைகள் பற்றிக் குறியீடாகக் காட்டப்படுகிறது. இதில் எலும்புக்கூடு வடிவில் முதலில் 'அடி வெட்டு கொல்லு' என்று கூறியபடி வரும் பாத்திரத்தின் சத்தம் மிக அதிகமாக இருந்தமையால் இரண்டாவதாக வரும் பாத்திரம் உச்சரிக்கும் சுலோகங்கள் பார்வையாளர்களின் காதில் விழாது போய்விடுகிறது.

யமலோகத்தில் சிலர் தண்டனைக்குள்ளாவது பற்றிச் சித்தரித்ததன் மூலம் சமூகம் பற்றிய தனது கருத்தை நாடகாசிரியர் சொல்கிறார். இந்திய ராணுவம், இயக்க உறுப்பினர்கள் எனப் பலதரப்பட்ட பாத்திரங்கள் நாடகத்தில் வருவதால் எமது சமூக நிகழ்வுகளை விமர்சிக்க நாடகாசிரியரால் இலகுவில் முடிகிறது.

தமது நாட்டுப் பிரச்சனை என்று கூறியவுடனேயே நினைவு வரும் இனப் பிரச்சனையை விளக்க இந்த நாடகாசிரியர் கைக்கொண்ட முறை பற்றி எனக்கு முற்றிலும் உடன்பாடு இருப்பதாகக் கூறமுடியாது. இன்று எமது மக்களின்மீது பெரும் ஒடுக்குமுறையைப் பிரயோகித்துவரும் சிறீலங்கா அரசின் ஒடுக்குமுறை போதியளவில் வெளிப்படுத்தப்படவில்லை. இது தமிழ் மக்களின் பிரதான எதிரி அரசல்ல என்ற தோற்றத்தையும் ஊட்டக்கூடியது.

இந்திய அமைதிப்படை பற்றிய காட்சியில் ஒரு வீரர் தனிநபராகக் காட்டப்படுகிறது. இதில் அந்தத் தனிநபர் அல்லது இந்தியப் படை என்கிற ராணுவம்

www.tamilarangam.net

மாத்திரமே பிரச்சனைக்குரியதாக உருவகம் செய்யப்படுகிறது அல்லது அத்தகைய உணர்வைக் கொடுக்கிறது. இதனால் அந்தப் படை போய்விட்டால் பிரச்சனை தீர்ந்துவிடும் அல்லது வேறு பிரச்சனைகள் உருவெடாது என்ற கருத்தில் கொள்ள இடமுண்டு. இதில் முக்கிய பிரச்சனையான பிராந்திய மேலாதிக்கம் பிடித்த இந்திய அரசு என்ற கருத்து முதன்மைப்படுத்தலே சிறப்பானது. இயக்க உறுப்பினர்கள் பற்றிய விவரணம், அந்த இயக்க உறுப்பினர் துவக்கை இயக்குவதைத் தவிர வேறெதுவும் அறியாதவர் அல்லது செய்ய இயலாதவர் என்ற ரீதியில் வெளிவந்தது. இந்தக் காட்சி தமிழ் மக்களின் போராட்டம் ஏன் இந்த நிலைக்கு உள்ளானது என்பதை மேலும் விபரமாகக் காட்டியிருக்க முடியும். இவ்வாறான போக்கினால் எதிர்காலத்தில் எமது சமூகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள், போராட்டத்தில் ஏற்படக்கூடிய அபாயங்கள் பற்றியும் இந்தக் காட்சி சற்றே ஆழமாக நோக்கியிருக்கலாம். அடுத்துவரும் காட்சி, வீதியில் ஒரு பெண் கொல்லப்பட்டதாக வருகிறது (யாழ் வீதியொன்றில் அநாதரவாகச் சுட்டுக் கொல்லப்பட்ட ராஜினியின் நினைவே இந்த இடத்தில் பார்வையாளர்கள் மனதில் எழும்) இங்கும் இது ஒரு தனிநபர் படுகொலை என்ற தோற்றத்தைவிட மக்களின் கருத்துச் சுதந்திரத்தின் மீதான, சுதந்திரமான இருப்பை வேண்டுவோர் மீதான அச்சுறுத்தலாக வெளிப்பட்டிருத்தலே அதிகம் பொருத்தமானது. தொடர்ச்சியான ஜனநாயக மறுப்பின் ஓர் அம்சமே இந்தப் படுகொலை என்றாலும் அவ்வாறு தொடர்ச்சியாக நிகழ்ந்துவந்த விடயங்கள் பற்றி மறைமுகமாகவேனும் வெளிப்படுத்தப் பட்டிருப்பின் சிறப்பாக அமைந்திருக்கும்.

இந்த நாடகத்தில் முக்கியமாக வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறையையே இயக்குநர் காட்டுகிறார். ஆனால் இது மலையக மக்கள், முஸ்லீம் மக்கள் போன்றோர் மீதான ஒடுக்குமுறைகளையும் மேலும் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இவ்வாறான தொடர்ந்த ஒடுக்குமுறைகளில் இருந்து தம்மை விடுவிக்க வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் ஆகியோர் எவ்வாறு போராட முடியும்



I. SMIRNOV


என்பது பற்றியும் ஒரு சிறு அளவில் கோடிகாட்டியிருப்பின் நாடகம் கருத்தளவில் முழுமை பெற்றிருக்க முடியும். ஒருவேளை நாடகத்தில் சொல்லும் செய்தியை குறித்த அளவுக்குள் நிறுத்த நாடகாசிரியர் விரும்பியிருத்தல் கூடும். நாடகத்தின் பின்னர் நிகழ்ந்தது கவிதா நிகழ்வு. இது பார்வையாளர்களிடம் கணிசமானளவு கவனத்தை ஈர்த்த ஒரு நிகழ்வாக இருந்தது போல் தோன்றுகிறது.

www.tamilarangam.net

கவிதா நிகழ்வு பல கவிஞர்களின் கவிதைகளை சிலர் வாசிப்பது என்ற நிலையில் அல்லாமல் பங்கேற்ற அனைவரும் கவிதைகளை முழுமையாக மனனமாக்கி சபையில் ஒரு நாடகம் நிகழும் உணர்வைத் தோற்றுவிக்க முயன்றனர். இதில் அவர்கள் பெருமளவில் வெற்றியும் பெற்றனர் என்றே கூறலாம். கவிதைகளின் தொகுப்பு ஒரு நேர்கோட்டுப் போக்கைக் கொண்டிராது பல அம்சங்கள் வந்து போவது போல ஓர் உணர்வு தோன்றியது. கூடியளவு ஒரு அம்சம் பற்றித் தெளிவாகச் சொல்ல முயன்றிருக்கலாம். எனினும் முன்னர் தமக்கு இந்தத் துறையில் அனுபவம் இல்லை என்று கூறியதை நோக்கும்போது படைப்பாளிகள் தம்மைப் பெருமளவு அர்ப்பணித்து இதை உருவாக்கியிருப்பதை உணர முடிகிறது.

கடைசியாக இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஓரிரு பாடல்கள் தவிர ஏனையவை சினிமாப் பாடல்களாகவே அமைந்திருந்தன. இதைத் தவிர்த்திருக்கலாம். எமது படைப்புகளில் உருவான பல நல்ல பாடல்கள் ஐரோப்பாவிலேயே இருக்கும்போது இவ்வாறு ஒரு நிகழ்ச்சி அமைவது வருத்தம் தருவது. ஐரோப்பாவின் வெவ்வேறு நாடுகளில் உள்ள எமது கலைஞர்கள் உருவாக்கிய பாடல்களை நிகழ்ச்சியில் சேர்த்திருப்பின் எமது படைப்புகள் என்ற உணர்வு தோன்றும், அல்லது எமது நாட்டில் பல அரசியல் அமைப்புகளாலும் உருவாக்கப்பட்ட கருத்து நயமும், இசைச்சிறப்பும் கொண்ட பாடல்களை இந்த நிகழ்ச்சியில் சேர்த்திருக்கலாம்.

ஐரோப்பிய சூழலில் பல சிரமங்களுக்கிடையே தான் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவற்றிலும் பெரும்பாலானவை வெறும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்ற அளவிலேயே நின்றுவிடுகின்றன. அந்த நிலையில் இருந்து ஒருபடி மேலே போய் சமூக உணர்வுடன் இந்த நிகழ்ச்சியை அமைத்திருந்தமை பாராட்டப்பட வேண்டியது. ஆயினும் அவர்கள் சமூகப் பிரக்ஞையுடன் எடுக்கும் இவ்வாறான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு அவற்றில் உள்ள இவ்வாறான குறைகள் களையப்பட வேண்டும். அவற்றைக் களைந்து மேலும் சிறப்பான நிகழ்ச்சிகளை இவர்கள் எதிர்காலத்தில் தருவர் என்ற நம்பிக்கை இருக்கிறது.



www.tamilarangam.net

மலையகத்தில் தோட்டங்களை அரசு 'மக்கள் மயப்படுத்தல்' என்ற போலிச் சுலோகத்தினால் மக்களை ஏமாற்றித் தனியார் மயமாக்க உள்ளது. (இ.போ.ச இதே மாதிரியான ஒரு 'மக்கள் மயப்படுத்த'லால் தனியார் மயப்படுத்தப் பட்டது பற்றி சில காலங்கள் முன் சுவடுகளில் அம்பலப்படுத்தப் பட்டிருந்தது) இந்த மக்கள் மயப்படுத்தல் உண்மையில் மக்களின் கைகளில் தோட்டங்கள் சேர்வதாகக் கருதும்படி யாரையும் தூண்டினாலும் இது உண்மையில் தனியார் மயப்படுத்தலேயன்றி வேறல்ல. இந்த நடவடிக்கையால் பல அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் எழலாம். அவற்றில் முக்கியமானவை இரண்டு.

1. இவ்வாறு தனியார் மயப்படுத்தலால் தொழிலாளர்கள் எதுவித கேள்வியும் இல்லாமல் வேலைநீக்கம் செய்யப்படலாம். அத்தோடு சம்பளக் குறைப்பு, அதிக நேர வேலை, ஏனைய சலுகைகள் இழப்பு என்பன ஏற்படலாம். இதனால் மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட உள்ளனர். இலங்கையை வாழவைக்கும் இவர்களின் வாழ்க்கைத்தரம் ஏற்கனவே எம்மால் நினைத்துப் பார்க்கமுடியாத அளவு மிக மோசமான நிலையில் உள்ளது.

2. மக்கள் மயப்படுத்தல் எனும் போர்வையில் சுவீகாரம் செய்யப்படும் தோட்டங்களில் இருந்து தமிழ்த் தொழிலாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்படும்.

முக்கியமான இந்த இரண்டு பிரச்சனைகளால் மக்கள் திரண்டெழாமல் இருப்பதற்காக அரசு மலையக மக்களின் தோள்களில் சவாரி செய்யக்கூடிய தொண்டமானைப் பயன்படுத்திப் பொய் வாக்குறுதிகளை வழங்கிப் பிரச்சனையைத் திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

பல லட்சம் மலையகத் தமிழர்கள் வீடுவாசல், சொந்தமாக ஒரு துண்டு நிலம்கூட இல்லாமல் இருக்கும்போது 'அமைதிப்படுத்தும்' நடவடிக்கையின் ஒரு கட்டமாக ஒரு சிலருக்கு பல்லேகலை ரஜவெல்ல தோட்டததில் காணிகள் பிரித்து வழங்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. இந்தச் சிறுமாற்றத்தையே பொறுத்துக்கொள்ள முடியாமல் இனவாதத்தின் ஊற்றுக் கண்ணான பிக்குகளில் ஒருவரான அஸ்கிரிய மகாநாயக தேரோ

## நடுத்தெருவில் விடப்படும் மலையக மக்கள்



www.tamilarangam.net

ஆட்சேபனை தெரிவித்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

பிரச்சனையோ பாரதூரமானது. சில தொழிற்சங்கங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனால் இன்னமும் பெரிய அளவில் எதிர்ப்பு நடவடிக்கைகள் கூட்டாக முன்னெடுக்கப் படவில்லை. இப்போதே இதற்கான எதிர்ப்புப் போராட்டங்கள் உரிய அமைப்புகளால் முன்னெடுக்கப்படா விட்டால் பின்னர் வரலாற்றுத் துரோகம் இழைத்தவையாக இந்த அமைப்புகள் ஆகிவிடும். தொண்டமானின் இ.தொ.கா. தொழிற்சங்கம் வானத்தில் காக்கா மல்லாக்கப் பறப்பதாக வேடிக்கை காட்டுகிறது. பாராளுமன்றத்தில் குளிர்காயும் யாழ்ப்பாணத் தலைமைகள் இவற்றைப் போதியளவு அம்பலப்படுத்தி எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடக் காணோம். (இவர்களிடம் ஏன் இதை எதிர்பார்க்கிறேன் என்று கேட்கிறீர்களா?)

மலைக்கொழுந்தன்

## சம்பளக் குறைப்பு

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் பொருளாதார நெருக்கடிகளை அடுத்து உயர்ந்தபட்ச சம்பளம் பெறும் அதிகாரிகளின் வருடாந்தச் சம்பளங்கள் குறைக்கப்பட உள்ளன. இதன் முதல்

கட்டமாக அரசியல்வாதிகளின் சம்பளம் கணிசமான அளவில் குறைக்கப்பட உள்ளது. மாநகரசபை மேயர்களினதும், மாவட்டசபை முதல்வர்களதும் சம்பளங்கள்

40,000 குறோணர்களால் குறைக்கப்பட்டு அவர்களது வருட சம்பளம் ஏறத்தாழ 3,50,000 குறோணர்கள் ஆகியுள்ளது.

சஞ்சயன்

## பாலியல் வன்முறைகள்

பொலிஸ் இராணுவம் மற்றும் நிர்வாக அதிகாரிகளால் பெண்கள்மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள் பற்றி மன்னிப்புச் சபை அண்மையில் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது. உலகில் மிகமோசமாக பெண்கள்மீது பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்படும் 14 நாடுகளின் பட்டியலை சபை வெளியிட்டுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், இந்தோனேஷியா, கௌதமாலா, பிலிப்பைன்ஸ், பெரு, சிலி, கிரேக்கம், உகண்டா, பிரிட்டன், துருக்கி, இஸ்ரேல், செனகல் ஆகிய நாடுகள் இந்த வரிசையில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான வன்முறைகளுக்கு அந்தந்த நாடுகளின் அரசின் நிர்வாகங்களே பொறுப்பு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சஞ்சயன்

Amnesty Nytt
சர்வதேச மன்னிப்புச் சபை (நோர்வேக் கிளை)யின் மாத இதழ்.
Amnesty Nytt
Amnesty Internatinal
Marridahls Vn 87,
0461, Oslo 4

www.tamilarangam.net

1. ***Fact-Finding Missions on Sri Lanka***
***1980-1992***
***An annotated bibliography***

*(published in April 92)*

*Over sixty fact-finding missions have visited Sri Lanka during this period, in order to investigate the ethnic conflict and the situation of human rights. This publication provides bibliographic information and an annotation of each report.*

*Price: US$ 7.00, UK£ 4.00 (40 pages)* *ISBN: 82-992606-1-2*

2. ***Sri Lanka:*** ***(published in March 1992)***
***A Chronology of Events 1991***
***Compiled by: Anton S. Philip***

*A record of events in Sri Lanka, monitored carefully and grouped according to different classification terms selected on the basis of their relation to the ethnic conflict and the human rights situation. Some highly significant events such as the assassination of Indian Prime Minister Rajiv Gandhi, the battle at Elephant Pass, the impeachment motion, and the constitutional crisis have been recorded under separate headings. We hope this document will be of assistance to those seeking to understand the complexity of the problems in Sri Lanka.*

*Price: US$ 10.00, UK£ 6.00 (100 pages)* *ISBN: 82-992606-0-4*

3. ***Ethnic Conflict and Human Rights in Sri Lanka:***
***An Annotated Bibliography***
***Compiled by Kumar Rupesinghe and Berth Verstappen***

*(published in 1988)*

*The book includes bibliographic description of 2300 documents with annotations. It covers the period between 1983 and 1988. It is probably the largest collection on a single ethnic conflict in the world. Available with 35% discount and postage free. (Original price UK £ 48.00)*

*New Price:US $ 50.00, UK £30.00 (576 pages)* *ISBN: 0-905450-65-*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### *Sinhalese Nationalism in the Media*

*(will be published in May 1992)*

*A summary on the discussion on Sinhalese nationalism from the period of 1970 to the present time. This bibliography contains articles from the Sri Lankan media as well as various views on the question of nationalism.*

*Price: US$ 15.00, UK £10.00 (Pages 150)* *ISBN: XXXXXXXXX*

5. ### *Tamil Nationalism*

*(Will be published in September 1992)*

*An annotated bibliography of the articles, books,documents and seminar papers which discuss the question of Tamil Nationalism and rights of self determination of the Tamils in Sri Lanka, from period between 1970 to the present time.*

*Price: US$ 15.00, UK £ 10.00 (Pages 150)* *ISBN: XXXXXXX*

6. ### *Ethnic Conflict and Human Rights in Sri Lanka: An Annotated Bibliography - 2nd Volume Compiled by Kumar Rupesinghe, Berth Verstappen and Anton S. Philip*

*(will be published in October 1992)*


*The book includes bibliographic description of 1500 documents with annotations. It covers the period between 1988 and 1992. A selection was made from the collection of 2500 documents from the Sri Lanka Resource Centre; each annotations contains bibliographic information.*


*Price:US $ xx.xx, UK £xx.xx (350 pages)* *ISBN: xxxxxxxxxxx*

*Information and payments towards: Sri Lanka Resource Centre, V/NIHR,*
*Grensen 18,*
*0159 Oslo, Norway.* *Fax: 47-2-42 25 42*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சிவராம்

# மேற்கு நோக்கி மக்கள்படை...

சோவியத் ஒன்றியமும் ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் போலிக் கொம்யூனிசம் ஆட்சியை விட்டு நீங்கியவுடன், அந்த நாடுகளில் வசித்த மக்கள் வெளிநாடு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. இதனால் இன்று பலலட்சம் மக்கள் இந்த நாடுகளில் இருந்து மேற்கு ஐரோப்பிய நாடுகளை நோக்கிப் படையெடுக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம், 'கொம்யூனிசம்' தோற்கடிக்கப்பட்டு 'ஜனநாயகம்' மலர்ந்ததும் நிகழும் என்று நம்பிய பல விடயங்கள் நிகழாமல் போனமையே. இந்த நாடுகளில் பொருளாதாரம் மேலும் மோசமான நிலையை எய்திவருவது ஒரு முக்கிய காரணம் எனலாம். இதனால் அதிருப்தியுற்ற பலரே மேற்கு நோக்கி ஓடிவருகின்றனர். தமது வாழ்வின் வளங்களைப் பெருக்க இவ்வாறு மேற்கு நோக்கி ஓடிவரவிரும்பும் கிழக்கு ஐரோப்பியர்களின் எணணிக்கை ஒன்றரைக் கோடி என மதிப்பிட்டுள்ளது ஐரோப்பியச் சமூகம். ஏறத்தாழ இரண்டரைக் கோடி மக்கள் மேற்குநோக்கி வர விருப்பம் தெரிவித்திருந்தனர். இவர்களில் ஒருகோடிப் பேர்கள் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று மேற்கு நாடுகளில் அதிகரித்து வரும் வெளிநாட்டவருக்கெதிரான புதிய நாஸிகளின் தீவிரவாதப் போக்கு மேற்கு நோக்கி வரும் இந்த மக்களால் மேலும்


www.tamilarangam.net

தீவிரம் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களது வருகை பற்றி ஐரோப்பிய சமூக நாடுகள் அவ்வளவு வரவேற்புக் காட்டவில்லை.

கிழக்கு ஐரோப்பியர்களில் முப்பது வீதமானோர், மேற்கில் தொழில் செய்ய விண்ணப்பிக்க விரும்புகின்றனர். ரஷ்யாவின் (ஐரோப்பியப் பகுதி) 23வீதமானோர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர். தொடர்ந்து நிலவும் மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பவே மக்கள் இவ்வாறு வெழியேற விருப்பம் தெரிவித்துள்ளனர். தற்போது இந்த நாடுகளில் ஏற்படுத்தப்படும் பொருளாதார மாற்றங்கள் மக்களுக்குத் தாங்கமுடியாத சுமைகளை ஏற்படுத்தியுள்ளன. இந்த நாடுகளில் சந்தைப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு இதைத் தெளிவாகக் காட்டுகிறது. லித்துவேனியா, அல்பேனியா, ஹங்கேரி போன்ற நாடுகளில் 65வீதமானோர் சந்தைப் பொருளாதாரத்தை எதிர்ப்பதாகக் கூறியுள்ளனர். போலந்தில் பாதிப்பேர் சந்தைப் கபாருளாதார அமைப்பை எதிர்த்துள்ளனர். ருமேனியாவிலும் இஅத நிலையே நிலவுகிறது

ஜனநாயகம் வந்துவிட்டதாக விளம்பரப்படுத்தப் பட்டாலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் லித்துவேனியஏ தவிர்ந்த நாடுகளில் பெரும் அதிருப்தி நிலையே நிலவுகிறது. காரணம் இந்த நாடுகளில் ஜனநாயகம் தனியே வரவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம், வன்முறை என்பவற்றையும் கூட்டி வந்துள்ளது. கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளில் பெரும் பங்கினர் 'ஐரோப்பிய சமூகத்'தில் இணைவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு புத்துயிரூட்ட இந்தியா முயற்சி — செய்தி.



www.tamilarangam.net

இலங்கையின் வரலாற்றில் அரசியல் சக்திகள் தம்மைத்தாமே வளர்த்திருப்பதையும், தம்மைத்தாமே அழித்திருப்பதையும் வெவ்வேறு உதாரணங்கள் கொண்டு காட்டலாம். காலம் காலமாகத் தம்மைப் பல வழிகளிலும் பலவீனப்படுத்தி வந்த கட்சிகளில் அனேகமானவை இடதுசாரிக் கட்சிகளே. இவையே இலங்கையில் ஒரு புரட்சிகர சிந்தனைப் போக்கோ, புரட்சியோ தோன்றாததற்கு முக்கிய காரணம் எனலாம்.

1960க்கு முந்திய காலகட்டங்களில் பல இடதுசாரி அமைப்புகள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தன. அவை ஒவ்வொன்றாகத் தம்மைத்தாமே அழித்துச் சிதைந்து இன்று சில பாராளுமன்றக் கட்சிகளாகவும், சில வெறும் குழுக்களாகவும் நிற்கின்றன. இவற்றால் பயனடைந்த முதலாளித்துவக் கட்சிகள் இன்று நாட்டின் பெரிய கட்சிகளாக இருந்து நாட்டை அந்நியர்களிடம் அடகுவைப்பதில் போட்டியிடுகின்றன.

முன்பு செல்வாக்குப் பெற்றிருந்து பின்னர் தனக்குள் சிதைவுற்ற கட்சிகளில் இலங்கை சமசமாஜக் கட்சி முக்கியமானது. இதிலிருந்து பிரிந்து இன்று தனிக் கட்சியாக நிற்கும் நவசமசமாஜக் கட்சி இலங்கையில் தற்போதுள்ள இனப்பிரச்சனை பற்றிச் சற்றேனும் பொறுப்புடன் சிந்திக்கும் கட்சி எனலாம்.

ஒப்பீட்டளவில் தமிழ் மக்களிடையேயும்விட சிங்கள மக்கள் மத்தியிலேயே பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ள இந்தக் கட்சி பகிரங்கமாகவே தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கோருகிறது. கொழும்புத் தமிழ்க் கட்சிகளே சுயநிர்ணய உரிமை பற்றி உரத்துப் பேசப் பயப்படும் சூழலில் கடந்த சில வருடங்களாகவே வடக்கு கிழக்கு மக்களின் அபிலாஷைகளைப் பற்றி சிங்களச் சூழலில் துணிந்து பேசும் ஒரு கட்சியாக இது திகழ்கிறது.

பௌத்த சிங்கள இனவாதம் தலைவிரித்தாடும் நிலையில்; இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வையும் முன்வைக்க யாரும் முன்வராத நிலையில்; தமிழர்களுக்கு ஆதரவாகக் கொழும்பில் பேசுதல் தேசத்துரோகம் என்று குற்றம் சுமத்தப்படும் சூழலில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி என்று கூற ஒரு சிங்கள அரசியல் கட்சி இருப்பது ஒருவகையில் தமிழர்களது அதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும். இவ்வாறான கட்சிகளும் இல்லாவிடில் சர்வதேச ரீதியில் தமிழர்கள்மீது குற்றம் சுமத்தவும், தமிழர்களுக்குப் பிரச்சனைகள் எதுவும் இல்லை என்று தாராளமாகப் பிரச்சாரம் செய்யவும் வாய்ப்பாகிவிடும்.

## தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்குக்

# குரல் தரும் ஒரு சிங்களக் கட்சி

www.tamilarangam.net

காலம்காலமாக இடதுசாரிகள் செய்த தவறுகள் எவ்வாறு இடதுசாரி இயககங்களையும், நாட்டையும் பலவீனப்படுத்தினவோ அவ்வாறே எமது இயக்கங்கள் செய்த தவறுகள் எமது எதிரி யார் நண்பன் யார் என்று அடையாளம் காணமுடியாத ஒரு சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. தமிழ் இயக்கங்களைப் பொறுத்தவரை நவசமசமாஜக் கட்சி ஒரு நேச அமைப்பாகக்கூடப் பார்க்கப்படவில்லை என்பதற்கு, கட்சி அமைப்பாளர் அண்ணாமலைக்கு நேர்ந்த கதி சாட்சி.

இதேரீதியில் எமது அரசியல் விதி போய்க்கொண்டிருந்தால் நாம் எமக்கு இருக்கக்கூடிய சில நேசசக்திகளையும் இழந்துவிடும் அபாயம் உள்ளது. கொழும்பில் இயங்கும் தமிழ் அரசியற் குழுக்களுக்கு பௌத்த பேரினவாதத்திலேயே வாழ்க்கை நடத்தும் இலங்கை அரசு மீதும், அதன் தலைவர் அதியுத்தம பிரேமதாசா மீதும் உள்ள நம்பிக்கை, இவ்வாறான ஒரு அரசியற் கட்சியிடம் இல்லை.

நவசமசமாஜக் கட்சியின் மூலம் லங்கா சமசமாஜக் க்ட்சியே. 1930களில் உருவாக்கப்பட்ட ல.ச.ச.கட்சி, ஆரம்ப காலங்களில் ஏறத்தாழ இருபது வருடங்கள் மக்களிடம் பெரும் ஆதரவைப் பெற்றுச் சிறப்பாக இயங்கிவந்தது. பிரித்தானிய அரசுக்கெதிரான போராட்டங்களையும் இக்கட்சி முன்னின்று நடத்தியது. இதன் போராட்டங்களில் 1953இல் இடதுசாரி இயக்கங்களின் தலைமையில் நடத்தப்பட்ட ஹர்த்தால் போராட்டம் மிக முக்கியமானதும் பெருவெற்றியைத் தந்ததுமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அப்போது பதவியில் இருந்த டட்லி



தனது பதவிக்கு ஆபத்து வரலாம் என அஞ்சி, தனது மந்திரிசபைக் கூட்டத்தைக் கடல்நடுவே கப்பலில் வைத்து நடத்தவேண்டிய சூழ்நிலை நிலவியது. இந்த ஹர்த்தால் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்கிலோ, டட்லியைப் பதவியில் இருந்து இறக்கும் நோக்கிலோ செய்யப்படாமையால் ஒரு நாளோடு நிறுத்தப்பட்டது. இந்த ஹர்த்தால் அடைந்த பெருவெற்றி இடதுசாரி அணியினருக்கே உரியது. ஆனால் இந்த வெற்றியை சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயகா தனது தேர்தல் வெற்றிக்குச் சாதகமாகப் பயன்படுத்த நினைத்து சமசமாஜக் கட்சியுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். இதுவே முன்னேறிக்கொண்டிருந்த இடதுசாரி இயக்கத்தின் முதலாவது வீழ்ச்சிக்கு வழிகோலியது●

www.tamilarangam.net


## தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா?
## தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா? தங்கநகையா?

நோர்வேயில் 22கரட் தங்கநகையைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் CITY TRADERS, ஒஸ்லோ

நீங்கள் விரும்பிய டிசைன்களில் நகைகளைப் பெற, நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் CITY TRADERS

நகைகள் மாத்திரமன்றி திருமணம் மற்றும் விசேட வைபவங்களுக்குரிய பட்டுச் சேலைகள் வேட்டிகளையும் எம்மிடம் பெறலாம்

எமது விற்பனை நிலையத்திற்கு ஒஸ்லோ GRØNLAND T _ bane நிலையக் கடைத்தொகுதியில் நேரில் விஜயம் செய்யலாம்

எமது தொலைபேசி இலக்கம்:

**:ity Traders**

Grønland T-banest
0188 Oslo 1
NORWAY
Tel. 02 - 172256
Fax. 02 - 172256

– எமது விற்பனை நிலையத்தில் விற்பனையாகும் 22 கரட் தங்கநகைகள் நோர்வே அரசின் நுகர்வோர் கட்டுப்பாட்டுப் பகுதியால் உத்தரவாதம் செய்யப்பட்டவை –

# எனது பதில்கள்

ஈழத்திரன்

ஒரு குறிப்பிட்ட இனத்தவர் தேசிய இனமா இல்லையா என்பது புறநிலைபூர்வமான காரணிகளாலும் அச்சமூகத்தின் கூட்டான அகஉணர்வின் பரிணாமப் போக்கினாலும் நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாகத் தேசிய இனத்திற்கு வரைவிலக்கணம் கொடுக்கும்போது பின்வரும் அம்சங்கள் வலியுறுத்தப் படுவதைக் காணலாம்.

- ஒரு பொது மொழி
- பொதுப் பிரதேசம்
- பொதுப் பொருளாதாரம்
- பொது உணர்வைப் பிரதிபலிக்கும் கலாசாரம்

இந்த வரைவிலக்கணம் 1913ஆம் ஆண்டில் ஸ்டாலினால் முன்வைக்கப் பட்டது. இதன் அடிப்படையில் மட்டும் ஒரு குறிப்பிட்ட மக்கள் தேசிய இனமா இல்லையா என மதிப்பீடு செய்வது முழுமையான அணுகுமுறையாக எனக்குப் படவில்லை. இந்த வரைவிலக்கணப்படி இப்போ உலகில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிவரும் பல இனங்களை தேசிய இனங்களாகக் கொள்ள முடியாது. வரலாற்று அனுபவங்களின், இன்றைய வரலாற்றுச் சூழல்களின் போக்குகளின் அடிப்படை யில் பார்க்குமிடத்து தேசிய இனம் பற்றிய கேள்வி பின்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

- கேள்விக்குரிய இனத்தவர் தம்மை ஒரு தேசிய இனமாகக் கருதுகிறார்களா? அல்லது அவர்கள் மத்தியில் அத்தகைய ஒரு உணர்வு வளர்ந்து வருகிறதா? அப்படியாயின் அத்தகைய நிலைமைக்கான காரணங்கள் என்ன?
- கேள்விக்குரிய இனத்தவர் தமது தேசிய இனத்துவத்தை வரையறுக்கக்கூடிய பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளார்களா? தற்போது அந்தப் பிரதேசத்தின் அந்தஸ்து என்ன? அதாவது அப்பிரதேசம் அவர்களின் வாழிடமாக உள்ளதா அல்லது இழந்துவிட்ட ஒரு பாரம்பரிய வாழிடத்துக்காக போராடுகிறார்களா?

தமது தனித்துவம் பற்றிய கூட்டான உணர்வும் (நாம் இந்த இனத்தவர் எனக் கற்பனை பண்ணி உணரும் தன்மை) ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துடன் தம்மை இனங்காணுதலும் இவற்றின் அடிப்படையில் தாம் ஒரு தேசிய இனம் என ஆழமாக உணர்ந்து செயற்படலும் வெறுமையான கருத்துரு ரீதியான வரையறுப்புகளையும்விட முக்கியமானவை. ஒரு மக்கள் தேசிய இனமா இல்லையா என்ற கேள்வி குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளில் நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த காரணங்களால்

www.tamilarangam.net

முன்தள்ளப்படுகிறது. உதாரணமாக 1950ஆம் ஆண்டில் வட கிழக்குத் தமிழர் ஒரு தனித் தேசிய இனமா என்ற கேள்வி எழவில்லை. அப்படி எழுந்திருப்பின் அது வெறும் ஆய்வு ரீதியான அல்லது கருத்து ரீதியான ஒரு அப்பியாசமாக மட்டுமே இருந்திருக்கும். தமிழ் ஈழம் என்ற பதத்தை தமிழ் மக்கள் கேள்விப்பட்டதுமில்லை. ஆனால் 1970களில் தமிழர் தனித் தேசிய இனமா இல்லையா என்பது பெரும் விவாதங்களைக் கிளப்பியது. இதற்கான காரணங்களை நான் இங்கு விளக்கத் தேவையில்லை. அந்த வரலாற்றுச் சூழலின் சிறப்பம்சங்களை மறந்து வட கிழக்கு தமிழரின் சுயநிர்ணயம் பற்றிப் பேசமுடியாது.

இன ஒடுக்கலின் பாதிப்புகளே தமிழ்த் தேசிய உணர்வின் பரவலாக்கலுக்கும் 'தமிழ் ஈழம்' எனும் பிரதேசத்தின் வரையறுப்புக்கும் வழிசெய்தன. சிங்களப் பேரினவாதத்திடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் தமக்கென ஒரு பிரதேசம் வேண்டும் என்ற உணர்வுதான் "தமிழ்மண்" எனும் உணர்ச்சி மிகுந்த சுலோகத்திற்கு வழிவகுத்தது. இந்தத் "தமிழ்மண்" திட்டமிட்ட சிங்கள மயமாக்கலுக்குப் பலியாவது அந்தச் சுலோகத்தின் ஆற்றலை மேலும் பலப்படுத்தியது. இன்று தமிழ்த் தேசியவாதம் குறுகிய இனவாதமாகச் சீரழிந்துவிட்டது. (இதுபற்றி வேறிடத்தில் பார்ப்போம்)

இந்த நோக்கிலேயே முஸ்லிம் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் பற்றிய கேள்வியையும் நாம் அணுகவேண்டும். சமீபகாலம்வரை முஸ்லிம் மக்கள் மத்தியில் தாம் ஒரு தேசிய இனமா என்ற கேள்வி பலமாக எழவில்லை. அத்தகைய ஒரு உணர்வு பரவலாகத் தென்படவில்லை. அவர்கள் தாம் இலங்கையின் பல பகுதிகளிலும் தெட்டம் தெட்டமாக வாழும் ஒரு சிறுபான்மையினர் என்ற உணர்வையே கொண்டிருந்தனர். முஸ்லிம்களின் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் வர்க்க, பிரதேச வேறுபாடுகளை உள்ளடக்கியிருந்தன. காலப்போக்கில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சிங்கள பேரினவாதத்தின் பிரதேச ரீதியாற விஸ்தரிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டனர். அவர்களுடைய வாழிடமும் பொருளாதார வாழ்வும் திட்டமிட்ட குடியேற்றங்களால் தாக்கப்பட்டன. இது கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்குத் தமது பிரதேசம் பற்றிய உணர்வு வளர வழிவகுத்தது. அதே நேரத்தில் வடகிழக்கு முஸ்லிம் மக்கள் தமிழ் இனவாதத்தாலும் பாதிக்கப்படுகின்றனர். தற்போது அவர்களின் வாழ்வுக்கு மாபெரும் ஆபத்தைத் தருவது தமிழ் இனவாதிகளின் பயங்கரவாதமே. வடக்கில் வாழ்ந்துவந்த முஸ்லிம் மக்கள் தமது பரம்பரையான வாழிடங்களிலிருந்து பலாத்காரமாக விடுதலைப் புலியினரால் வெளியேற்றப்பட்டுள்ளனர். இப்போது இவர்களில் பெரும்பாலானோர் அகதிகளாகத் தென்பகுதிகளில் வாழ்கின்றனர். கிழக்கிலருந்தும் பல முஸ்லிம்கள் தமிழ் இனவாதிகளின் பயங்கரவாதத்தால் அகதிகளாகத் தெற்கில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்த நிலைமை வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் தமக்கென ஒரு பிரதேசம் வேண்டுமெனும் உணர்வை வளர்க்க உதவியுள்ளது. இவர்கள் இரண்டு இனவாதங்களால் (அதாவது சிங்கள தமிழ்) தாக்கப்படுகிறார்கள். இது முஸ்லிம் மக்கள் மத்தியில் தேசிய இன உணர்வை வளர்க்கலாம். ஆனால், இலங்கை பூராவிலும் உள்ள முஸ்லிம்களின் பெரும்பான்மையினர் தம்முடன் இனங்காணும் ஒரு பொதுப் பிரதேசம் இதுவரை இல்லை. அதே நேரம் வடக்கு

www.tamilarangam.net

கிழக்கு முஸ்லிம்கள் தமக்கென ஒரு தனியான பிரதேசத்தைக் அகாருவதற்கான நியாயப்பாட்டினைக் கொண்டுள்ளனர். இத்தகைய கோரிக்கை இப்போது கிழக்கிலும் மற்றைய தமிழ்ப் பகுதிகளிலும் அவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் பிரதேசம் ஒன்றை அடிப்படையாக வைத்து எழலாம். முஸ்லிம்மக்களின் இன உணர்வு எப்படித் தொடர்ந்தும் பரிணமிக்கப் போகிறது என்பது இங்கே முக்கியம் பெறுகிறது. அவர்களின் சில அரசியல் தலைமைகள் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இத்தகைய ஒரு கோரிக்கையை ஏற்கனவே பல வடிவங்களில் முன்வைக்கின்றன. ஆனால் தெற்கில் வாழும் முஸ்லிம்கள் இதனால் இதுவரை கவரப்படவில்லை. முஸ்லிம் மக்கள் இதனால் இதுவரை கவரப்படவில்லை. முஸ்லிம் மக்களின் பரவலான தெட்டம் தெட்டமான குடியிருப்பு நிலைமைகள் அவர்கள் பிரதேச ரீதியான ஒரு வரையறுப்பைப் பெற்றுக்கொள்ளத் தடையாகவே இருக்கும். இந்தப் புறநிலையை மாற்றுவது சுலபமல்ல. இதற்கு முஸ்லிம்கள் மத்தியில் இருந்தே எதிர்ப்புத் தோன்றலாம். மீண்டும் ஒரு தடவை கூறின் - பிரதேச அடிப்படையில் தனித்துவத்தைப் பேணும் அவசியத்தை உடனடியாக எதிர்நோக்குபவர்கள் வடகிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களே. இதற்கான உடனடிக் காரணங்கள் தமிழ் இனவாதப் பயங்கரமும், (கிழக்கில்) சிங்கள இனவாதமுமாகும்.

விடுதலைப் புலிகளதும் (மற்றைய சில இயக்கங்களதும்) இனவாதச் செயற்பாடுகள் வடகிழக்குத் தமிழரின் பிரதேச அடிப்படை பற்றிய பிரச்சனையை மேலும் மோசமாக்கியுள்ளன. ஒன்றிணைந்த வடகிழக்கினை ஏற்கும் நிலையில் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இல்லை. தமிழ் இனவாதம் பற்றிய அவர்களின் பயம் நியாயமானதே. அவர்களின் பாதுகாப்பைப் பொறுத்தவரை உத்தரவாதமற்ற ஒன்றிணைந்த வடகிழக்கு, ஒரு நியாயமான தீர்வாகாது. விடுதலைப் புலிகளின் குறுகிய இனவாதமும் பலாத்கார நடைமுறையும் அவர்களிடமிருந்த (முஸ்லிம் மக்களிடமிருந்த) அற்ப நம்பிக்கைகளைக் கூட அழித்துவிட்டன. வடகிழக்கு முஸ்லிம்கள் தமக்கென ஒரு பிரதேசத்தையோ அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளையோ கோருவது நியாயமானதே. விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் குறுகிய இனவாதப் போக்கில் சென்றுகொண்டிருந்தால் இத்தகைய கோரிக்கையின் நியாயப்பாடும்

## தபாலில் ஒருபிடி சாம்பல்.....

*என்னிடம்*
*இன்னமும் எஞ்சியிருப்பது*
*அவர்கள் அனுப்பிவைத்த*
*என்னை எரித்த*
*எனது சாம்பல்.*
*அவர்களின் ஆணைப்படி*
*எனது சாம்பல்*
*இப்போ என்னிடம்.*

*இவர்கள் சந்தையில்*
*எனது உயிருக்கான விலை*
*ஒரு தீக்குச்சி.*
*ஒரேயொரு தீக்குச்சி.*

*எனது சாம்பலுக்கான விலையோ*
*3.30 + 0.50 குறோணர்கள்.*
*எனக்கு ஒரு வருத்தம்.*
*எனது இரவல் முகவரியைக்கூட*
*தப்பில்லாமல் இவர்களால்*
*எழுத முடியவில்லையே என்பதுதான்.*
*'புத்திஜீவனாய்' எனது சாம்பலைப்*
*பதவியுயர்த்திய இவர்களுக்கு*
*எனது நன்றிகள்*

*- விமல்ராஜ் -*

www.tamilarangam.net

வலுப்பெறும்.

மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமெனும் கருத்தை 1970களிலிருந்தே சில மலையக அறிவாளர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர். மலையகத் தமிழ் மக்களை வடகிழக்குத் தமிழருடன் இணைத்து ,அவர்களையும் உள்ளடக்கிய ஒரு தமிழ் ஈழம் பற்றிப் பல இயக்கங்கள் பேசின, இப்போதும் பேசுகின்றன. ஆனால் இது மலையகத் தமிழரின் உணர்வின் அடிப்படையில் எழுந்த முடிவல்ல. அதற்கு மாறாக அவர்களின் அபிலாஷைகளுக்கு மதிப்புக் கொடுக்காது தமிழ் இயக்கங்கள் தம் குறுகிய இனவாத நோக்கங்களுக்ககாகவே இப்படியான கொள்கைளைப் பின்பற்றுகின்றன.

தமிழர் எனப்படும் பொதுவான இன உணர்வு எல்லாத் தமிழருக்கும் ஒரு பொதுப் பிணைப்பைக் கொடுக்கலாம். ஆனால் தேசிய இனம் எனும்போது வடகிழக்குத் தமிழரும் மலையகத் தமிழரும் ஒரு கூட்டத்துக்குள் அடங்குவர் என்பது தவறானதாகும். வரலாறு, புவியியல், சமூக, அரசியல், பொருளாதார பிரச்சனைகளின் அடிப்படையில் மலையகத் தமிழரிடமிருந்து வேறுபட்ட தன்மைகளைக் கொண்டுள்ளனர். அவர்களின் மலையகத் தமிழர் எனும் உணர்வு இத்தகைய காரணிகளின் விளைவானது. பெருந்தொகையான மலையகத் தமிழர் தோட்டத் தொழிலாளர்கள். இவர்கள் வர்க்க ரீதியில் சுரண்டலுக்கும் உரிமை மறுப்புகளுக்கும் ஆளாகியுள்ளனர். அதேநேரம் மலையகத் தமிழர் இன அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றனர். மலையகத் தமிழர் மத்தியில் தாம் ஒரு தேசிய இனம் எனும் உணர்வு வளரத் தொடங்கியுள்ள போதிலும் இது இன்னமும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது. மலையகத்திலும் தமிழருக்கு பிரதேச வரையறுப்புப் பிரச்சனை உள்ளது. சிங்கள இனவாதத் தாக்குதல்களுக்குள்ளான மலையகத் தமிழர் மலையகத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கும்

இந்த இதழ் மிக்க தாமதமாகவே வெளிவருகிறது. இது வழமையான எமது நெருக்கடிகளுடன் கூடவே ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டது. சுவடுகளை நிறுத்திவிடலாமா என்று நாம் சிந்திக்குமளவு இந்த நெருக்கடி எம்மைச் சிக்கலுக்கு உள்ளாக்கியது. எனினும் மீண்டும் சுவடுகள் உங்களை வந்தடைகிறது. ஆதரவுதர வேண்டுகிறோம்.

●

ஈழத்துப் பெண்கவி சிவரமணி தனது வாழ்வை முடித்துக்கொண்டு மேமாதம் 19ம் திகதியுடன் ஒரு வருடம் நிறைகிறது. சிவரமணியின் நினைவுகள் நல்ல கவிதைகளை நேசிக்கும் அனைவரது மனதிலும் நீங்காதிருப்பன.

.........

நாம் எல்லாம் இழந்தோம்
எனினும்
வேண்டவே வேண்டாம்
எங்களில் சிலரது விடுதலை
மட்டும்;
விலங்கொடு கூடிய
விடுதலை மட்டும்
வேண்டவே வேண்டாம்!

தோழர்களே
விலங் குகளுக்கெல்லாம்
விலங்கொன்றைச் செய்தபின்
நாங்கள் பெறுவோம்
விடுதலை ஒன்றை.

- சிவரமணி -

www.tamilarangam.net

வடகிழக்குக்கும் நகர்ந்தனர். இன்னொரு பகுதியினர் அரசாங்கத்தால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். மலையகத்தின் ஒருசில பகுதிகளிலேயே தமிழர் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். கடந்த பல வருடங்களாக தேயிலைத் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்களின் தொகையை அதிகரிக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருகிறது. இது அவர்களின் பிரதேச அடிப்படையைப் பாதிக்கும். அதுமாத்திரமன்று, வேறொரு அடிப்படைப் பிரச்சனையும் எழுகிறது. மலையகத் தமிழரில் பெரும்பான்மையினர் தோட்டத் தொழிலாளர்கள். இவர்கள் பூரண ஜனநாயக உரிமையைப் பெறுவதற்கும் சமூக நகர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளைப் பெறுதவதற்கும் இற்றைய பெருந்தோட்ட அமைப்பு அடிப்படையான மாற்றங்களைப் பெறவேண்டும். அவர்கள் பூரண விடுதலை பெற்ற தொழிலாளர்களாக வேண்டும். இதற்கான மாற்றங்கள் இன்றைய குடியிருப்பு புவியியல் நிலைமைகளை மாற்றாமல் ஏற்பட முடியாது. அத்தகைய மாற்றங்கள் மலையகத் தமிழரை இனரீதியில் பரவலாக்கி எங்குமே சிறுபான்மையினராக்கிவிடலாம். பெருந்தோட்ட அமைப்பின் ஜனநாயக மயமாக்கல் இத்தகைய விளைவுகளை ஏற்படுத்துவதை இன்றைய நிலையில் மலையக மக்கள் விரும்பமாட்டார்கள். அதேநேரத்தில் அவர்களது சமூக முன்னேற்றத்திற்கு பெருந்தோட்ட முறை ஜனநாயக மயமாக்கப்படல் அவசியம். தொழிலாளர் என்ற அடிப்படையில் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்களாயுள்ளார்கள். இவை இரண்டும் இணைந்த போராட்டமாகவே அவர்களது போராட்டம் அமைகிறது. ஆனால் இதுவரை மலையகத் தமிழர் மத்தியில் எழுந்துவரும் இயக்கங்கள் அம்மக்களின் நிரந்தரப் பிரதேசம் என மலையகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை வரையறுத்திருப்பதாகத் தெரியவில்லை. அப்படிச் செய்வது மலையகத் தமிழரின் உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தலாம். ஆனால் இன ஒதுக்கல் தொடர்ந்தால் அவர்களும் ஒரு பிரதேச அடிப்படையை மலையகத்தில் தேட நிர்ப்பந்திக்கப் படுவார்கள். பிரதேச அடிப்படையைப் பொறுத்தவரை மலையகத் தமிழரின் நிலைமை முஸ்லிம்களின் நிலைமைகளைவிட சாத்தியப்பாடுகள் கொண்டதாகவே தென்படுகிறது. ஆனால் உண்மையில் ஏற்கனவே குறிப்பிட்ட காரணங்களால் அத்தகைய பிரதேச அடிப்படை பற்றிய தீர்வு சிக்கலானதென்றே நம்புகிறேன்.

(மலையக மக்கள் பற்றி கடைசிச் சுவடுகளில் வெளிவந்த கொழுந்தனின் கட்டுரையையும் பார்க்கவும்)

## கேட்டது..........

ஆங்கில வருடப்பிறப்பு ஜனவரியிலும், பின்னர் தமிழ் (இந்துக்கள்?) வருடப்பிறப்பு ஏப்ரல் மாதத்திலும் வருகிறது. இதனால் வருடப்பிறப்பு பற்றிக் கதைக்கும்போது இரண்டையும் பிரித்து விளக்கமாகக் கதைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு தனிச் சொற்கள் இருப்பது நல்லதுதானே? இவவளவு எல்லாம் செய்யிற தமிழன் ஏன் இதற்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிக்கிறானில்லை என்று அங்கலாய்த்தார் ஒருவர்.

உடனே அவரது கடி தாங்காத நண்பர் பட்டென்று சொன்னது, "அதைப் புதுவருஷம் எண்டும் இதைப் புத்தாண்டெண்டும் சொல்லித் தொலையும்"

*தீஸன்*

www.tamilarangam.net



**நோர்வேவாழ் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி!**
**உலகின் சகல பாகங்களுக்கும் மலிவான**
**விலையில் விமானச் சீட்டுகள்**
**மலிவான கட்டணங்கள்!**
**தரமான சேவை!!**

*எமது முகவரியில் நேரிலோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளுங்கள்*

FLOWRIDA TRAVELS
Osterhaus Gt21E
0187 Oslo 1
*தொலைபேசி: 02/114941*
*02/363365*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஓர் எதிர்க்கிளர்ச்சி
# வரலாற்றில் ஒரு பக்கம்

*- விதுரன் -*



கண்டி மன்னன்

ஸ்ரீ விக்கிரமராசசிங்கன்

கண்டியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரும் நோக்குடன் கண்டி மன்னனின் அத்தாணி மண்டபத்தில் கூடிய ஆள்பதியும் அவரது உதவியாளர்களும், கண்டி இராச்சியத்தின் திசாவைகள் உட்பட பலமுத்த அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி 12பிரமாணங்களை உள்ளடக்கியதாக ஒரு சமாதான உடன்படிக்கையை செய்தனர்.

இவ் உடன்படிக்கையின் பிரகாரம் கண்டிமன்னன் விக்கிரமசிங்கன் பதவி இழந்துள்ளதாகவும் அவனது முந்தைய-பிந்தைய சந்ததியினர் எவராயினும் ஆளுரிமையுடையவர்கள் எனவும், இவர்களில் எவராவது ஆங்கிலேயர் அனுமதியின்றி கண்டிப் பிரதேசத்தினுள் நுழையும் பட்சத்தில் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமெனவும் பௌத்தமதமும் மக்களது கலாசார அனுட்டானங்களும் தொடர்ந்து பேணப்பட்டு, புத்தகுருமாருக்குள்ள சமூக அந்தஸ்து தொடர்ந்தும் பேணப்படுமெனவும், திசாவைகள், இறட்ட மகாத்மாயாக்களின் அதிகாரங்களும் உரிமைகளும் தொடர்ந்து இருக்குமெனவும் உறுதியளிக்கப்பட்டது.

ஆனால் கண்டியரின் நிலை முற்றிலும் மாறானதாயிருந்தது. கண்டிமக்கள் சிங்களவராயிருந்த போதும் அவர்களுக்கு அரசன் எனறால் தெய்வத்துக்கு சமானமானதாக நினைத்து செயற்பட்டனர். "திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேன்" என மன்னனை வணங்கி அவனுக்கு அடிமைத் தொழில்செய்து தமது குறைகளை முறையிட்டு நீதி பெறுவதுமாயிருந்தனர். இந்நிலையில் தமது புதிய அரசன் 7500 மைல்களுக்கப்பாலுள்ள இங்கிலாந்தில் இருப்பதாகக் கூறியதை நம்ப மறுத்தனர். தவிர புதிய ஐரோப்பியர்களுக்கு தலைவணங்கவும் மறுத்தனர். சிங்கள அரசவம்சம் முற்றுப்பெற்று நாயக்கர் வம்சம் வேரூன்றியதை விரும்பாத கண்டியர், தற்போது ஆங்கிலேயர் தமக்குப் பெரும் துரோகத்தை இழைத்து விட்டதாகக் கருதத் தொடங்கினர். நாயக்க மன்னனை நீக்கிவிட்டு ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்வார்கள் என்றே கண்டியர் கருதினர். மன்னன் விக்கிரமசிங்கனை ஆட்சியைவிட்டு அகற்றவேண்டும் என்பதில் திசாவைகளும் அதிகாரிகளும் கொண்டிருந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒற்றுமையைப் பார்க்கிலும் ஆங்கிலேயனை நாட்டைவிட்டு அகற்றிவிட வேண்டும் என்பதில் தற்போது கண்டிப் பிரதானிகள் யாவரும் ஒன்றுபட்டனர்.

ஆங்கிலேயர்கள் கண்டியரையும் இலங்கையின் ஏனைய பிரஜைகளையும் சமானமாக நடத்த முற்பட்டமையை கண்டியர் வெகுவாக எதிர்த்தனர். கண்டி இராச்சியத்துக்கும் கரையோரப் பிரதேசங்களுக்கும் இடையிலான வியாபாரத் தடைகள் நீக்கப்பட்டமையும், சுங்கவரி அறவீடுகள் நீக்கப்பட்டதையும் கண்டியர் வெகுவாக எதிர்த்தனர். ஆங்கிலேயருக்கும் தமக்கும் இடையில் இனம், மதம், மொழி, சிந்தனை, கலாசாரம் போன்ற விடயங்கள் வேறுபட்டு இருக்கையில் ஆங்கிலேயர்கள் தங்களை ஆளநினைப்பது எருமைக் கடாவையும் பசுமாட்டையும் ஒரேநுகத்தில் பூட்டி வண்டியிழுக்க வைப்பதற்குச் சமானமாகும் எனக் கண்டியர் கருதினர்.

ஆங்கிலேயர்கள் கண்டியைக் கைப்பற்ற எகிலப்பொல, மொலிகொடை, பிலாமை மொனராகல போன்ற பலதரப்பட்ட சிங்கள அதிகாரிகள் உதவியதுபோல், வியாபாரம் செய்துவந்த முஸ்லீம்களில் ஒருபகுதியினரும் கண்டியைக் கைப்பற்றுவதில் ஆங்கிலேயருக்கு உதவியாக இருந்தனர். இவர்கள் தமது பொதிகளில் ஆயுதங்களைச் சுமந்தும் உளவுவேலைகளில் புத்தபிக்குகளுடன் இணைந்து செயற்பட்டும் வந்தனர். இதற்கு பிரதியுபகாரமாக வெல்லாசியைச் சேர்ந்த மக்காவுக்குச் சென்றுவந்த கச்சிமரைக்கார் என்பவருக்கு கிராம அதிகாரி பதவி வழங்கப்பட்டது. இதனையும் கண்டியர் விரும்பவில்லை. இந்நியமனம் ஆங்கிலேயர் தம்முடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு மாறானது எனக் கருதினர். இந்நிலையில் 11/07-1817இல் பதுளை மாகாண அதிபர் வில்சனுக்கு ஒரு தகவல் கிடைத்தது. பதவிநீக்கப்பட்ட மன்னன் விக்கிரமசிங்கனின் மைத்துனன் துரைசாமி தனது படையினருடன் ஆட்சியைக் கைப்பற்ற வந்துள்ளான் என்பதே அச்செய்தியாகும். அச்செய்தியை அடுத்து கலகத்தை அடக்கி வருமாறு வில்சன் கிராமஅதிகாரி கச்சிமரைக்காரை அனுப்பிவைத்தான். கலகக்காரர் கச்சிமரைக்காரைப் பிடித்துக் கட்டிவைத்தனர். கச்சிமரைக்காரை மீட்கச் சென்ற மாகாணஅதிபர் வில்சன் கலகக்காரர்களால் கொலைசெய்யப் பட்டான். நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்ட ஆள்பதி கண்டி திசாவைகள் அதிகாரிகளை அத்தாணி மண்டபத்துக்கு அழைத்து ஆத்திரத்துடன் கத்தினார். அத்துடன் மூப்பும் முதிர்ச்சியுமுற்றிருந்த ஊவாப்பகுதி திசாவையை நீக்கிவிட்டு அப்பகுதிக்கு திசாவையாக மொனறவில கெப்பெற்றிப்பொலவை நியமித்தான்.

கண்டியின் அரசவரலாற்றில் ஆங்கிலேயர் செய்த இப்பதவி மாற்றம் தொடர்ந்துவந்த காலத்தில் ஆங்கிலேயருக்கு நல்லதொரு பாடத்தைப் படிப்பித்ததுடன் மனவெறுப்புற்று கண்டியைவிட்டு வெளியேறவும் விரும்பினர்.

1815இல் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஆங்கிலேயர் இயங்கவில்லை என வெளிப்படையாகக் கூறிவந்த கெப்பெற்றிபொல தமது பிரதேசத்தில் இருந்த பல தலைமைக்காரர்கள் ஆங்கிலேயருக்குப் பந்தம் பிடித்தமையைக் கண்டித்து தண்டித்தான். இந்நிலையில் ஊவாப்பகுதியின் திசாவையாகப் பதவிமாற்றம் பெற்ற கெப்பெற்றிபொல அங்கு நடந்த கலவரத்தை அடக்கிவரும்படி படையினருடன் அனுப்பப்பட்டான். கலகம் நடக்கும் பிரதேசத்துக்கு சென்றபோதுதான் அது வெறும் கலகமல்ல, "வெள்ளையனே வெளியே போ!" என எழுந்த ஒரு 'எதிர்க்கிளர்ச்சி' என உணர்ந்தான். இதனால் தமது ஆயுதங்களைப் படையினரிடம் ஒப்படைத்துவிட்டு

www.tamilarangam.net

அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டு கலகக்காரர்களுடன் இணைந்தான்.

மொலிகொடவும் எகிலப்பொலவும் ஆங்கிலேயருடன் இருந்த காலத்தில் கெப்பெற்றிபொல கலகக்காரர்களது தலைவனானான். இவனுக்கு உதவியாக கொடகெதற, அதிகாரம் ஆகிய இரு பெரியார்களும் 17தலைமைக்காரர்களும் இருந்தனர். 1/1-1818முதல் இவர்கள் யாவரும் "அடங்காப் பிடாரிகள்" என ஆங்கிலேயரால் பிரகடனப் படுத்தப்பட்டு அவர்களது பொருள் பண்டங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. கலகத்தை எப்படியாவது அடக்கவேண்டுமென விரும்பிய ஆங்கிலேயர், பதுளை மட்டக்களப்பு வீதிகளை நன்கு பாதுகாத்து முஸ்லீம்களுக்கு ஆசைவார்த்தைகூறி முஸ்லீம்கள் செறிந்துவாழும் "கொட்டபோவா" என்ற இடத்தில் படைமுகாம் அமைத்து மட்டக்களப்பு, மாத்தறை, கண்டி, பதுளை போன்ற இடங்களிலிருந்து போதிய படைகளை ஊவாப்பகுதிக்கு அனுப்பினர். ஆனால் கலகக்காரர்களுக்கு சாதகமாக நாடெங்கும் கனத்தமழை பெய்தது. வெள்ளம், மண்சரிவு என்பன ஏற்பட்டமையால் கொழும்பிலிருந்து படைகளை அனுப்பமுடியாமல் களனிகங்கை பெருக்கெடுத்து ஓடியது.

இதற்குள் கலகம் பன்மடங்காகப் பெருகியது. மொலிகொடையைத் தவிர்த்து ஏனைய திசாவைகள் கலகக்காரர் பக்கம் சாய்ந்தனர். மூன்றுகோரளை, நான்குகோரளை, உடுநுவற, யட்டிநுவற நீங்க ஏனைய பிரசேமெங்கும் "வெள்ளையனே வெளியேறு" என்ற குரல் ஆவேசமாக ஒலித்தது. துரைசாமி கண்டியரசனாகவும் கெப்பெற்றிபொல முதலாவது அதிகாரியாகவும் பதவியேற்க வேண்டும் என்ற அடிப்படையில் கண்டியின் பிரதான அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்தனர்.

படைத்தலைமையேற்ற கெப்பெற்றிபொல மேஜர் மக்டொனால்ட் கோட்டையைத் தாக்கினான். அதுமுதல் ஆங்கிலேயரின் பலகோட்டைகள் கிளர்ச்சியாளர்கள்வசம் வீழ்ந்தது. கலகத்தை அடக்க ஆங்கிலேயர்கள் வெகுவாகச் சிரமப்பட்டனர். அவர்கள் மனம்சலித்து கண்டியைவிட்டு வெற்றிகரமாகப் பின்வாங்கவும் யோசித்தனர். ஆங்கிலேயப்படைகள் சிதறடிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான படைவீரர்கள் கொல்லப்பட்டனர். தனது 5000 படைவீரர்களுடன் கெப்பெற்றிபொல ஆங்கிலேயப் படைகளை எதிர்த்து நிர்மூலமாக்கியதை பிரபல சரித்திர ஆச்ரியர் டேவி தனது நூலில்




விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். பல படைப் பிரிவுகளையும் வெற்றிகொண்டு வெற்றிப் பெருமிதத்துடன் முன்னேறிய கிளர்ச்சிப்படைகளது வெற்றி, தும்பறைப்பகுதி தலைவன் மடுகல்லவையும் கிளர்ச்சியாளர் பக்கம் சாயவைத்தது. ஆனால் மொலிகொடவும் எக்னெலிகொடவும் ஆங்கிலேயர் பக்கம் நின்றனர். இதனால் நாலுகோறளை

www.tamilarangam.net

ஊடாக ஆங்கிலேயரால் படைவீரர்களையும் ஆயுதங்களையும் கொண்டுசெல்லக் கூடியதாயிருந்தது.

கண்டியை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் திருகோணமலையில் இருந்து 2000 படைகள் கண்டியைநோக்கிச் சென்றபோதும் கெப்பெற்றிபொலவை அடக்க இயலவில்லை. 1803இல் தாம் கண்டியப்படைகளிடம் அனுபவித்த துன்பங்களை நினைந்து ஆங்கிலேயர்கள் கவலைப்பட்டனர். இதற்குள் இந்தியாவிலிருந்துவந்த பெரும் படைப்பிரிவுகள் கண்டிப் பிரதேசத்துக்குள் ஊடுருவி, பொதுமக்களை வாளால் வெட்டியும் உடைமைகளைச் சூறையாடியும் கலகத்தை ஆதரித்தவர்களது மனைவி, பிள்ளைகளைக் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொன்றும், வீடு வயல்களை கொழுத்தியும் பழியறியாப் பாமர மக்களைத் துன்புறுத்தி கொடூரமான முறையில் கலகத்தை அடக்க முயன்றனர். இந்தியாவின் சென்னை, வங்கம் போன்ற இடங்களிலிருந்தும் தொடர்ந்து ஆயிரக்கணக்கில் படைகள் வந்தனர். இலங்கையில் விசுவாசமான இடங்களில் படைகளைத் திரட்டினர். கண்டியர் தமது பழமைவாய்ந்த ஆயுதங்களுடன் நிரந்தரமாக ஆங்கிலேயரை வெற்றிகொள்ள இயலவில்லை. தமது மனைவி, பிள்ளைகளைப் பணயமாக வைத்திருந்த ஆங்கிலேயரிடம் கலகக்காரர்கள் சரணடைந்தனர். இந்நிலையில் கலகத்தின் மூச்சுக் குறையத் தொடங்கியது. தம்முடனிருந்த துரைச்சாமி உண்மையில் அரசவம்சத்தைச் சேர்ந்தவனுமல்ல என்றும் நாயக்க வம்சத்தவனுமல்ல என்றும் முன்பு புத்தபிக்குவாயிருந்த ஏழுகோரளையைச் சேர்ந்த வில்பாவே அவன் என்றும் அறிந்துகொண்டனர் கலகக்காரர்கள். இதற்குள் பிலிமைத்தலாவை வீரவாகு என்னும் தமிழ் இளைஞனை மன்னாரில் வைத்துக் கண்டிமன்னன் எனப் பிரகடனம் செய்தமையால் கலகத் தலைவர்களிடையே அபிப்பிராயபேதம் ஏற்பட்டது. இந்நிலையில் 28/10-1818இல் பரவகம என்னும் ஊரில் கெப்பெற்றிபொலவும், 1/11-1818இல் பிச்சைக்காரன் வேடத்தில் விந்தனையும் வேடர்மத்தியில் மடுகல்லையும் ஆங்கிலேயரிடம் பிடிபட்டனர். பிலிமைத்தலாவை பிரகடனஞ் செய்த வீரவாகுவை பிளாக்கவுஸ் மன்னாரில் சிறைப்பிடித்தான். இவ்வாறு சற்றும் எதிர்பாராத சூழலில் 2/11-1818இல் புத்தரின் புனிதப்பல் ஆங்கிலேயர்வசம் கிட்டியது. (புத்தரின் புனிதப்பல் யாரிடம் உள்ளதோ அவர்களே தம்மை ஆளத் தகுதியுடையோர் என்பது கண்டி மக்களது நீண்டகால அசைக்கமுடியாத சம்பிரதாயமாகும்)

கிளர்ச்சியாளர்கள் யாவரும் விசாரிக்கப்பட்டு, ஏகிலப்பொலவுக்கு சிரச்சேதமும் கெப்பெற்றிபொல மடுகல்ல உட்பட 28பேருக்கு கொலைத் தண்டனையும் கிடைத்தது. 10பேர் மொறீசியஸ் தீவுக்கு நாடும் கடத்தப்பட்டனர். ஒருவர் இயற்கை மரணம் எய்தினார். 8பேர் மன்னிப்பும்பெற்று விடுதலையாகினர். கலகத்தில் பங்கெடுத்த புத்தபிக்குகள் யாழ்க் கோட்டையில்

---

## மாறாது வேலைவாய்ப்பு!

ஒன்றுபட்ட ஐரோப்பிய சமூகம் உருவாகினாலும் எதிர்வரும் 15 வருடங்களுக்குப் பின்பும் (2005) முழு ஐரோப்பாவிலும் மொத்தம் மூன்று கோடி மக்கள் வேலையின்றி இருப்பர் என ஐரோப்பிய சமூகத் தூதுவர் ஒருவர் கூறியுள்ளார்.

கேசவன்

---

www.tamilarangam.net

சிறைவைக்கப்பட்டனர். உரியகாலத்தில் சரணடையாத 75தலைவர்களது சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தியப்படைகள் இலங்கையைவிட்டுச் செல்கையில் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட செலவீனம் சுமார் 23,2675 பவுண்கள் என மதிப்பிடப்பட்டது.

பேராசிரியர் குலசேகரம் இலங்கை வரலாறுபற்றி எழுதிய தமது நூலில், மகாதிசாவை என விளங்கிய கெப்பெற்றிபொலவுக்கு 26/11-1818இல் கொலைத்தண்டனை வழங்கப்பட்டதாயும், அவனது தலை துண்டிக்கப்படமுன் அவன் புத்தரின் புனிதப்பல்லுக்கு வணக்கம் செலுத்திவிட்டு தானமும் செய்துவிட்டு புன்முறுவலோடு மரணத்தை வரவேற்றதாயும், அவனது அபார மூளைத்திறனை ஆராயவிரும்பிய ஆங்கிலேயர் ஸ்கொட்லாண்டிலுள்ள தமது மூளை ஆராச்சி நிலையத்துக்கு அவனது தலையை அனுப்பி ஆராச்சி செய்வித்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. ஆரம்பம் முதலே தம்மை "சிங்களத் தேசியவாதி"யாகக் காட்டிவந்த கெப்பெற்றிபொலவுக்கு சிலையெழுப்பி அவனை தேசியவீரனாக மதிக்கவேண்டும் என்ற கண்டியரின் விருப்பம் இலங்கை சுதந்திரம் அடைந்தபின் சாத்தியமாயிற்று.

இக்கிளர்ச்சிபற்றி உயர்நீதிமன்ற நீதிபதி லோரிஸ் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "1818இல் ஆங்கிலேயர் இலங்கையில் நடந்துகொண்டமைக்கு வெட்கப்பட்டு தலைகுனியாமல் இருக்க இயலாது. கண்டிமக்களது குடும்பத் தலைவர்கள் எனக் கணிக்க ஒரு ஆணையாவது விட்டுவைக்காமல் இந்தியப் படைகளோடு சேர்ந்து ஆங்கிலேயர்கள் குரூரமாகக் கொலைசெய்தனர். அவர்களது வாளுக்கும் துப்பாக்கிக்கும் தவறியவர்களை பிளேக்நோயும் கொள்ளைநோயும் அள்ளிச்செல்ல எஞ்சிய சிறுபிரிவினர் படிப்பு வசதியின்றி துன்புறுத்தப்பட்டு

## *அழகிய குடும்பங்கள்*

*லூயிஸ்* I
*லூயிஸ்* II
*லூயிஸ்* III
*லூயிஸ்* IV
*லூயிஸ்* V
*லூயிஸ்* VI
*லூயிஸ்* VII
*லூயிஸ்* VIII
*லூயிஸ்* IX
*லூயிஸ்* X
*லூயிஸ்* XI
*லூயிஸ்* XII
*லூயிஸ்* XIII
*லூயிஸ்* XIV
*லூயிஸ்* XV
*லூயிஸ்* XVI
*லூயிஸ்* XVII
*இத்துடன் எவருமேயில்லை, எவையுமேயில்லை.*
*இருபது வரையும் எண்ணத் தெரியாமல்,*
*சவடால் விட்டுக்கொண்டிருக்கும்,*
*இவர்கள்தாம் என்ன?*

●

ஜாக் பிறவேர்
(தமிழில்- க.கலாமோகன்)

வாடிவதங்கினார்கள்" என்பதாகும்.

இவ் எதிர்க்கிளர்ச்சிபற்றி பின்னாளில் குறிப்பிட்ட ஆள்பதி பிறவுண்றிக், மொலிகொடவும் எக்னெலிகொடவும் ஆங்கிலேயருக்கு உதவியிராவிட்டால் தாம் கண்டியைவிட்டு பின்வாங்கியதைத்தவிர வேறுவழி இருந்திருக்காது எனவும் இலங்கை முழுவதிலும் எமது ஆட்சி வலுப்பெற மொலிகொடவும் எக்னெலிகொடவும் முக்கியமானவர்களாக இருந்தனர் என்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வ.ஐ.ச.ஜெயபாலன்

## ஒரு அகதியின் பாடல்

வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளை உள்ளடக்கிய புதிய கவிதைத் தொகுதி. சுவடுகள், பாலம் ஆகிய சஞ்சிகைகளிலும், துருவச் சுவடுகள் கவிதைத் தொகுதியிலும் வெளிவந்தனவும் மற்றும் சில கவிதைகளையும் கர்நாடக இசையில் அமைக்கப்பட்ட சிலபாடல்களையும், நோர்வேயில் இசையமைக்கப்பட்ட மெல்லிசைப் பாடல்களையும் தொகுத்து நூலாசிரியரின் முன்னுரையுடன் தேடல் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அட்டை ஓவியம் சி.பிரேம்ராஜ், நூல் அச்சுக்கோர்ப்பும் வடிவமைப்பும் பீநட்ஸ் கிரா∴பிக்ஸ் (ஒஸ்லோ), தொடர்புகள்: Thedal Pathippaham, 556 Parliment street, Toronto, M4X1P8, CANADA

# ஒரு அகதியின் பாடல்

"நமது தேசிய இனத் தன்மையை உறுதிப்படுத்த 1947களில் இருந்து போராடி வீழ்ந்த சகலருக்கும் அவர்களின் கருத்து, கட்சி எதுவாக இருப்பினும் நாம் தலைமுறை தலைமுறையாகக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களின் தியாகங்களை மலினப்படுத்தக்கூடாது. எனினும் அவர்கள் விடுதலைப் பாதையில் கைக்கொண்ட வழிகளும் முறைகளும் ஆரோக்கியமாக விமர்சிக்கப் படவும் வேண்டும். அதனூடாக நமது தாயக வாழ்வும், போராட்டமும் மேலும் செழுமையுறும். நமது போராட்டத்தில் ஜனநாயகப் பண்புகளும் அரசியல் தன்மையும் அதிகரிப்பதும், வெற்றிகள் கிட்டுவதும் மட்டுமே நமது தேசிய இனத்தின் பதில் கிடைக்காத பல்வேறு புதிர்களை விடுவிக்கும். நாம் தாய்நாட்டின் போர்க்கொடுமைக்கு முகம் கொடுத்து வாழ்ந்தாலும் சரி, அகதிகளாகச் சிதறியிருந்தாலும் சரி நாம் புயற்கடலில் ஒரே படகில் பயணம் செய்பவர்கள்தான்."

www.tamilarangam.net

# அகதிப் புறா

தமயந்தி



யன்னல் திரையை விலக்கி, கண்ணாடியினூடு பார்வையை எறிந்து ரசித்தபடி எவ்வளவு நேரம் நின்றான் என்பது அவனுக்கே தெரியாது. குத்துமதிப்பில் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் நின்று ரசித்திருப்பான்.

இந்தத் தேசத்தில் சாந்தனுக்குப் பிடித்த ஒருசில விடயங்களில் இதுவும் ஒன்று. சோளப்பொரியை வாரி இறைத்தது போல வெண்பனிக் குஞ்சுகளை அள்ளி, பூமியை நோக்கி வானம் தூவும்போது, உதிரியாய் வந்து குவியும் பனித்துகள்கள்; தெருவில், கூரைகளில், மலைமுகடுகளில், மரக்கிளைகளில், வாகனங்களில் என்று அனைத்திலும் படிந்து பூமியே வெண்மையாக மாறுவதை எத்தனைநேரம் வேண்டுமானாலும் அவனால் ரசிக்க முடியும்.

இப்படிப் பனித்தூறல்களை 'எங்கட தமிழ்ச்சனம்' 'விசர்வெதர்' என்று கூறும்போதும், புறுபுறுக்கும்போதும் இவனுக்கு எரிச்சல் வருவதுண்டு. ஆனாலும் காட்டிக்கொள்வதில்லை.

பல சமயங்களில் நள்ளிரவுகளில்கூட எழுந்திருந்து, தெருவிளக்கின் மஞ்சள் ஒளியில் பொன்னிறப் புற்றீசல்களைப் போல் பறந்திறங்கி நிலத்தில் குவியும் பனித்துணிக்கைகளை, இமைக்க மறந்து, தூக்கம் துரத்தி நீண்ட நேரம் ரசித்திருப்பான்.

பனித்தூறல் நின்று, பாதம் புதையுமளவு பனிப்படர் தெருக்களைக் கவிந்திருந்தது.

எந்தத் தடமும் பதிந்திராத, கிளறிச் சிதையாத புதிதாய், பனிகுவிந்த தெருவால் சப்பாத்துகள் நெருநெருவென்று புதைய, புதிய தடங்கள் பதித்து நடப்பதிலும் சாந்தனுக்கு அலாதிப் பிரியம் உண்டு.

குளிருடை, சப்பாத்துகளை அணிந்தவனாய் வீட்டின் கதவைப் பூட்டிவிட்டு, தெருவில் இறங்கிப் புதிய தடங்களை வெண்பனிப் படர்மேல் பதித்து நடந்தான். ஓர் இதமான சுகம் அவன்

www.tamilarangam.net

இதயத்தில் குளிர் பரப்பிற்று.

ஆயினும், கடந்த காலங்களில் அவன் நடந்துவந்த பாதையில், பதித்த தடங்களின் நினைவுகள் அவனது சிந்தனைக் கோடியிலிருந்து சீண்டிக் கொண்டிருந்தன. எந்தப் பனிக் குவியல்களினுள்ளும் புதைக்க முடியாத நினைவுகள் அவை. எந்தக் கடலலையிலும் கரைத்துவிட முடியாத நிகழ்வுகள் அவை.

காற்சட்டைக்கு மேலாக இழுத்துவிட்ட, கொஞ்சமும் பொருத்தமற்ற பென்னாம் பெரீ.....ய சேர்ட் காற்றில் அசைந்தாட, இடுப்பில் 'ரீற்றா' (கைத்துப்பாக்கி) உரசித் துருத்திக் கொண்டிருக்க, ஓர் கதாநாயகத் தன்மையோடு, நீண்ட நாட்களின் பின் தன் ஊருக்குள் நுழையும்போது, தெரிந்த, சொந்த முகங்களின் மரியாதைக்குரிய பார்வையின் ஒத்தடங்கள் தரும் சுகம்; அப்பப்பா..... அந்தப் பார்வை ஒத்தடத்தில் மேலுமொருபடி நெஞ்சு நிமிர்ந்து, வீரம் விளைவது போல் இருக்கும். அப்போதெல்லாம் அவன் அந்த மரியாதை ஒத்தடங்களை எண்ணிப் பெருமிதப்பட்டதுண்டு. ஆனால் அவற்றின் உண்மைச் சொருபங்களை உணர்ந்தபோதுதான் வெட்கித்துக் கொண்டதோடு நொந்தும் போனான்.

கருத்து முரண்பாடுகள் காரணமாக (சுருக்கமாக) தான் சார்ந்திருந்த இயக்கத்தைவிட்டு வெளியேறி கைத்துப்பாக்கியை இழந்தவனாய் தன் சொந்த ஊரில் இருந்தபோது அப்பாவிப் பிராணியைப் பார்ப்பதுபோல் ஊரின் ஓர் நக்கலான பார்வை அவனைத் திணறடித்தது.

"அப்படியானால் இயக்கத்தில் இருந்தபோது கிடைத்த மரியாதை ஒத்தடங்கள்.....?" ஓ... அவை இடுப்பில் துருத்திநின்ற கைத்துவக்கிற்குக் கிடைத்தனவா?

பறவாயில்லை, இது அடிப்படைத் தவறின் விளைவு. சனங்களை வென்றெடுக்காத, வெறும் கதாநாயகத் தன்மை கொண்ட திரிதலின் முடிவு" என்று ஆதங்கம் கொள்வான். இந்தத்

தவறுகளில் தனக்கும் பங்கிருப்பதையும் அவன் உணரத் தவறவில்லை.

இவன் சார்ந்திருந்த இயக்கம் இவனைத் தேடி ஊருக்குள் வந்தபோது (மண்டையில் போடத்தான்) சொந்தச் சகோதரி உட்பட ஊரே இவனுக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்தபோதுதான் சிறுகைத்துப்பாக்கிக்கு இருக்கும் பெரிய வலிமையை உணர்ந்துகொண்டான்.

"இந்தச் சின்னத் துவக்கிற்கு இருக்கிற வலிமைகூட எங்கட சனத்துக்கு இல்லையா...? அப்படிச் சொல்வது தவறு, சனங்கள் வலியவர்கள். அந்த வலிமை பட்டை தீட்டப்படாமலே கிடக்கிறது. அதுகள் மட்டும் பட்டை தீட்டப்பட்டால் இந்தத் துப்பாக்கி நரல்கள் எந்த மூலைக்குள்ள? சனத்தைவிட்டுப் பிரிஞ்ச துவக்குகள் நாசமாய்ப் போக"

மனுவேட்டைத் துவக்குகளின் சன்னங்களிலிருந்து தப்பித்து கொழும்பு, பிறகு நோர்வேயிலுள்ள அண்ணனின் உதவியோடு துருவவாசம்.

"ஹாய்..." தெருவில் பனிச்சறுக்கல் விளையாடிக் கொண்டுநின்ற வெள்ளைச் சிறுசுகளின் இனிய குரல்கள் சாந்தனின் எண்ணக் கதிர்களை மீண்டும் பனி போர்த்த தெருவில் கொண்டுவந்து போட்டன. தன்னை மறந்தவனாய் நீண்ட தூரம் வந்துவிட்டான்.

அண்ணன் வரதன் பாடசாலையால் வந்துவிடப் போகிறான். அவன் இங்கு பன்னிரண்டு வருடமாகப் படித்துக் கொண்டேயிருக்கிறான். என்ன படிக்கிறான் என்ற புரியாத விடயம் ஒருபுறமிருக்க, அவன் வீட்டிற்கு வந்தால் இன்னும் சமையல் ஆகவில்லை என்பதை அறிந்தால் குதிப்பான். அதற்குள்


www.tamilarangam.net

வீட்டிற்குப் போய் கோழியை உரித்து வெட்டி முடித்தால் போதும். பாதிச் சமையல் முடிந்து போனதற்குச்சரி.

பனியில் விளையாடும் வெள்ளைச் சிறுசுகளை விலத்தி மீள நடந்தான்.

அவனது நடையின் வேகத்தைவிட, இதயத்தின் ஓர் இனம்புரியாத படபடப்பு வேகமாயிருந்தது. இன்னொருவரில் தங்கியிருக்கிறோம் என்ற உணர்வின் அச்சம் அவனது படபடப்பிற்கு மேலும் தூபம் போட்டு வைத்தது.

வீட்டுக் கதவை மெதுவாகத் திறந்தவனுக்கு கோழியும் வெண்காயமும் சேர்ந்து அவியும் சகிக்கமுடியாத வாசனை "அண்ணன் வந்துவிட்டானடா" என்று மூக்கில் அறைந்து கூறியது. "ஆமாம் ஆமாம்" என்று ஆமோதிப்பதுபோல



வாசற்படியில் வரதனின் ஈரமான வின்ரர் சப்பாத்துகள் மல்லாந்து கிடந்தன.

தான் அஞ்சியதுபோல ஏதோ நடக்கப்போகிறது என்ற நெருடலுடன் குளிருடையைக் கழட்டி வாசற்சுவரோடு ஒட்டியிருந்த கொக்கியிள் கொழுவி,

## வேவு

காய்ந்து கலகலத்த
வேலியோரச் சருகிடையுள்
பூச்சி, பூரான் சரசரப்பும்
யமன் கனைப்பாய் நடுங்கவைக்கும்.

மரணம் திரிகிறது,
மரணம் திரிகிறது.

கடைவாயால் நுரைதள்ள
வேட்டைநா யுருவெடுத்து
கடைக்கோடித் தெருபிறந்து
கட்டுப் படலைவரை
மரணம் திரிகிறது.

வீட்டுமுந் தானைக்குள்
சாவுகவ்வா மனிதமொன்று
உயிர்சுமந்து மூலைக்குள்
பாரமுயி ரெனவிருக்க,
குழைதொலைத்த மாதுளையோ
முற்றத்திற் கொப்பசைத்து
இருட்காற்றில் நடுநடுக்கம்.

குழியுட் புதைந்ததிரு
விழிகள் இமைமூடா-
- தெரிதல் சுமந்தபடி
மெலிந்தமா துளைமறைவில்
உடல்மறைத்து இருள்வேவ
தெருவெல்லாம் படர்ந்திருக்கும்.

வேலியோரச் சருகரைந்துஞ்
சத்தமில்லா தூர்ந்துவரக்
கற்றதந்த மரணங்களாம்.

இருளவளை விழுங்கிநிற்க
அவள்விழிகள் இருள்விழுங்கி
மைந்தனுயிர் காப்பதற்காய்
மறைந்துவேவில் விழித்திருப்பாள்.

நாடோடி

www.tamilarangam.net

சப்பாத்துகளையும் கழட்டிப் போட்டுவிட்டு மெல்லத் தன் அறைக்குள் நுழைந்தான்.

சாந்தனின் மொத்தச் சொத்துகளுமான ஆறேழு புத்தகங்கள், சில உடைகள், கவிதைகள்போல் சில கிறுக்கல்களைத் தாங்கிய தாள்கள், ஒரேயொரு பச்சைநிறப் பயணப்பை ஆகியன அவனது அறையின் மத்தியில் குவிக்கப் பட்டிருந்தன. சுவரிலிருந்து பலாத்காரமாகப் பிடுங்கியதால் மூலைகள் கிழிந்துபோன நிலையில் ஒற்றைக் குண்டூசியில் சரிந்து தொங்கும் ஒற்றைப் புறா புகைப்படம் பரிதாபமாய்க் காட்சி தந்தது.

"எல்லாம் முடிஞ்சுபோச்சு." எனத் தன்னுள் கூறிக்கொண்டவனாய் அடுக்களை நோக்கி நகர்ந்தான்.

கொதித்த உலையினுள் அரிசியைப் போட்டுவிட்டு அகப்பையால் துழாவிக்கொண்டு நின்ற வரதனின் பார்வை அடுக்களையுள் நுழைந்த சாந்தனை ஒருகணம் பொரித்தெடுத்தது. அண்ணன் வரதனின் பார்வையால் பொரிந்துபோனவனை "அகதி நாயே! எங்க உலாத்திப்போட்டு வாறாய்? உன்னை இங்கை எடுத்தது பெரிய உபத்திரவமாப் போச்சு. இன்னும் ஏன் சொறிநாய் போல என்னோடயே இருந்து கழுத்தறுக்கிறாய்?" என்ற வரதனின் நெருப்பு வார்த்தைகளால் கருகித்தான் போய்விட்டான். மௌனியாய் அவன்.

மூலைகள் கிழிந்துபோன ஒற்றைப்புறா இப்போ அகதிப்புறாவாய் அவனது ஏனைய சொத்துகளுடன் சாந்தனின் முதுகில் சிறுசுமையாக.

மீண்டும் அவனின் பாதங்கள் பனித்தெருவை மிதித்துச் செல்கின்றன. ஆனால் இப்போது அந்தத் தெருவின் ஓரங்களை மூடியிருந்த பனிப்படர்மேல் நிறையவே மனிதத் தடங்கள். மனிதத் தடங்கள் நிறைந்துபோனதால் அழுத்தமான பனிப்படர் சிதைவுற்றுச் சிந்திக் கிடந்தன.

தான் ஓர் அகதி, என்ற உண்மையைச் சுமந்தபடி நடக்கிறான்.


வானம் மீண்டும் பனிப்பூக்களைச் சொரிய அவை அகதிகளாய் தெருவை, கூரைகளை, மலைமுகடுகளை, மரக்கிளைகளை வந்தடைந்த வண்ணமிருந்தன. சாந்தன் தனது தலையிலும், தோள்களிலும், சில அகதிப் பனித்துணிக்கைகளுக்குத் தஞ்சம் கொடுத்து தானும் ஓர் அகதி என்ற உண்மையைச் சுமந்தபடி நடக்கிறான்.

## மரணவரம்

பொன்போர்த்த வர்ணத்தில்
உயிர்நீத்த இலைகளெலாம்
தாய்மரத்தின் காலடியில்
சரணாகதி குவிய,
எல்லாம் இழந்த மரம்
துளிர்ப்பே னினியோவென
வானத்தை அண்ணார்ந்து
வரம் வேண்டும் வேளையிலே
முகில் குவிந்து,
அணிதிரண்டு,
மூச்சுவிடப் புயலாகி;
கடல் கொதித்துக்
கரைபுரண்டு
வரம் கேட்ட மரம் சாய்ந்து
தன் சருகுட் தான்புதையும்
வரமீந்த வானிப்போ
என்ன நேர்ந்ததென
பூமியைக் கேட்டால்....?

**தமயந்தி**

www.tamilarangam.net



# போரும் சதைப்பிண்டங்களும்

நோர்வே நாட்டின் முக்கிய கலாசார மையமாக கருதப்படும் பொது நூலகங்களுக்கு கடந்த வருடம் கிட்டத்தட்ட ஒரு கோடியே 76லட்சம் தடவை மக்கள் விஜயம் செய்துள்ளனர். இது 1989ம் ஆண்டைவிட 7,6% அதிகமாகும்.

கடந்த வருடம் இரண்டு கோடி தடவை புத்தகங்கள் இரவல் எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி ஒரு நபர் தலா ஐந்து புத்தகங்களாவது இரவல் எடுத்துள்ளனர். இது மக்களின் வாசிக்கும் பழக்கத்தைக் காட்டுகிறது.

இது ஒருபுறம் எமது நாட்டிலோ கதைவேறு. யுத்த சூழலில் ஏற்கனவே இருந்த வாசிக்கும் பழக்கம் பெரிய அளவில் குறைந்துள்ளது. அத்தோடு ஒரு விடுதலைப் போராட்டத்தின் காலத்தில் மக்களிடையே புதுவகையான சிந்தனைப் பெருக்கமும் கலாசாரப் படைப்புகளின் உருவாக்கமும் புதியவகைச் சிந்தனைத் தேடலும் உருவாவது வழக்கம். இவற்றை நெறிப்படுத்தி வளர்ப்பதில் உண்மையான விடுதலை இயக்கங்களும் உண்மையான புரட்சிகர ஸ்தாபனங்களும் மற்றைய நாடுகளில் மிக முக்கிய பங்காற்றியுள்ளன.


ஆனால் நமது நாட்டிலோ நிலைமை வேறு விதமாக உள்ளது. ஒரு இனக்கலவரத்தைத் தொடர்ந்து எழுந்த விடுதலை உணர்வினால் பலரிடையே புதியவகைச் சிந்தனைப் போக்கும் கடுமையான சிந்தனைத் தேடலும் எழுந்தன. இவற்றை அப்போதைய 'விடுதலை' இயக்கங்கள் சரியான முறையில் வளர்த்தெடுக்கவில்லை. இதைத் தொடர்ந்து கெடுபிடிகளின் பின்னர்

இன்று நிலைமை மேலும் மோசமாகவே உள்ளது. ஏற்கனவே இயக்கங்களிடம் இருந்த கருத்து மறுப்புப் பாரம்பரியம் இன்று நிறுவன மயப்பட்டது போலவே உள்ளது.

முன்னர் தலைமைகள் தமது துதிபாடும் அல்லது தமது தலைமைக் கருத்தை மட்டும் அனுமதிக்கும் போக்கிற்கு அப்பால் மாற்றுக் கருத்துகள் வெளியாகிக் கொண்டிருந்தன. (கருத்து மறுப்பானது எமது இயக்கங்களின் பொதுவான குணாம்சமாகவே வளர்ந்திருந்தது மறுக்க முடியாத உண்மை)

இன்றும் ஒழுங்காகப் பாடசாலைகள் நடைபெற முடியாத சூழல் 'குறைந்தபட்சம்' பாடசாலைக் கல்வியைத்தானும் பெறமுடியாத நிலை. மாற்றுக் கருத்துகள், பத்திரிகை அனுமதியில்லாத சூழல். புதிய வகை கருத்துகள், சிந்தனைகள், புதிய கலாசாரப் படைப்புகள் வெளிவர முடியாத நிலை. (இது வெளிவராமல் இருக்க வேண்டும்

www.tamilarangam.net



நன்றி: ஜூனியர் போஸ்ட்

## பாதையோரத்து மரங்கள்

பாதை யோரத்தில்
மரங்கள் வேணுமென்று
யார் முதலில் சொன்னது?
அரசனின் பெயரைப்
புத்தகம் சொன்னது
பாதம் வெடித்துப்

பிடரியில் ரத்தம் வழிய
தூரத்துக் குடிசையைக்
கானலில் அழைத்த
அவன் என்று
நான் சொன்னது
மூளை கொதியாமல் இருக்க
மண்டையில் வளர்த்த மயிர்
என்றது மண்.

வளர்ந்த கதை மறந்துபோய்
நிழலுக்காய் ஏங்கி
அலைந்து பறந்து நிலைத்து

நின்றன மரங்கள்.

உமாபதி

என்று திட்டமிட்டுத் தடுக்கப்படுவது துரதிர்ஷ்டமானது) சிறுவர்கள் கல்விகற்கும் நேரத்தில் ஆயுதம் தரிக்கும் அவலம். இயக்கப் பிரசுரங்களும், இயக்கத் தலைவர்களின் துதிபாடும் படைப்புகளும் மட்டுமே இயக்க முகாம்களில் கிடைக்கும் அவலநிலை. இதனால் வெளியுலகம் தெரியாத 'சலவை' செய்யப்பட்ட அறிவுடன் ஆயுதம் தாங்கிய நிலை. இவை எமது தேசத்தின் எதிர்காலம் பற்றிய ஆபத்தைச் சுட்டிநிற்கின்றன.

இத்தகைய நிலை ஸ்டாலினின் காலத்தை ஒட்டியும் அதன் பின்னரும் சோவியத் யூனியனில் இருந்து வந்தது. மக்களை சுய கருத்து, உணர்வு அற்ற பிண்டங்களாக ஆக்கும் போக்கே இருந்தது. இதற்கு முக்கிய காரணம் மாற்றுக் கருத்துகள் 'அதிகாரவர்க்க முதலாளிகளால்' மறுக்கப் பட்டமையே. இந்த வரலாற்றுப் படிப்பினையூடாக நாம் மாற்று நடவடிக்கைகளைத் தேடவேண்டிய நிலையில் உள்ளோம்.

இன்று நாட்டில் இத்தகைய மோசமான போக்கு இருந்தபோதிலும் வெளிநாடுகளில் வரும் சிறுசஞ்சிகைகளில் மாற்றுக் கருத்துகள் வர அனுமதி, புதிய தேடல் என்பன ஆரோக்கியமான அம்சங்கள். ஆயினும் இவை வெறுமனே முனைகள்தான். இத்தகைய போக்கு வளர்ந்து ஆலமரமாக மாறும்போதுதான் சரியான விடுதலையையும் (அல்லது போக்கையும்) உருவாக்க முடியும். இதன் மூலமே மக்கள் உண்மையான விடுதலைக் காற்றைச் சுவாசிக்க முடியும். 'ஆமாம்' என்றுவிட்டு எமது சமூகத்தில் அரிதாகவே உள்ள சிந்தனையாளர்கள்கூட படுத்துத் தூங்கிவிடுவார்கள். செயல் இருக்காது. மேலே சொல்லப்பட்ட போக்கை இவர்கள் எவ்வளவு தூரம் விமர்சித்தாலும் இவர்களின் செயல் தொடங்காதவரை இந்தச் சிந்தனையாளர்களும் பிற்போக்குத் தனத்துக்குத் துணைபோகிறவர்கள்தான்!

ச.தேவன்

www.tamilarangam.net

# சாதிகள் இல்லையடி பாப்பா

அண்மைக்காலத்தில் ஜேர்மனியின் பல பாகங்களிலும் வெளிநாட்டவர்கள் மீது நேரடியான தாக்குதல்கள் நடந்து வருகின்றன. சுவீடனில் ஓரிரு அகதி முகாம்களில் குண்டுகள் வைக்கப்பட்டன. ஸ்டொக்ஹோமில் அடையாளந் தெரியாத வெறியன் ஒருவனால் இதுவரை ஐந்து வெளிநாட்டவர்கள் மீது லேசர் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தப்பட்டுள்ளது.

பரவலாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்துவரும் இவ்வாறான நிறவெறித் தாக்குதல்களினால் சகலருமே கலவரம் அடைந்துள்ளனர். 1938ம் ஆண்டு யூதர்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட நாஸிகளின் தாக்குதல்களின் நினைவு தினமான, வரலாற்றில் 'கிறிஸ்டல் இரவு' எனக் குறிப்பிடப்படும் கார்த்திகை மாதம் 9ம் திகதியன்று ஐரோப்பாவின் பல பாகங்களிலும் நிறவெறிக்கு எதிரான அணிவகுப்புகளும் கூட்டங்களும் நிகழ்ந்தன. ஒஸ்லோவில் வெளிநாட்டவர்க்கு எதிரான பெரிய அமைப்புகளில் ஒன்றான என்எம்ஐயின் (Nordmenn Mot Innvandring) கூட்டம் பெரும் எதிர்ப்பாளர்களைச் சந்தித்தது.

இந்தியாவில் தமிழ்நாட்டில் சாதி உணர்வுகள் முன்நிறுத்தப்பட்டு சாதிச் சங்கங்கள் நிறுவப்பட்டதால் இன்று அங்கே சாதிகள் இல்லாத சங்கங்கள் இல்லை. அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் தெரிவோ, வேலைகளுக்கான ஆட்தெரிவோ சாதிகளின் அடிப்படையில் கணிக்கப்பட்டன. எம்.ஜி.ஆரின் மறைவின் பின்னர் இந்த நிலை மோசமாகி இன்று தி.மு.க தனது பிராமண எதிர்ப்பைப் பிரகடனப்படுத்தி, கருணாநிதி ஜெயலலிதாவைப் 'பாப்பாத்தி' என்று குறிப்படும் அளவுக்கு நிலைமை உச்சக் கட்டத்தில் உள்ளது.

நாம் ஈழத்தமிழர்கள் இதற்கொன்றும் சளைத்தவர்களில்லையே! 'தமிழ் ஈழத்துக்கு அனுமதி தாருங்கள்' என்று வாக்குக் கேட்ட கூட்டணியினர் உடுப்பிட்டித் தொகுதியில் "இங்கே ஒரு சாதி குறைந்தவர் எமது வேட்பாளராக நிற்கிறார்" என்று இராசலிங்கத்தை காட்டியபோது வாய்பிளந்து ஆதரித்தவர்களல்லவோ நாம். அன்றே நமது நாட்டிலும் சாதி ஒதுக்கீடு என்ற விதை தூவப்பட்டது.

இது மட்டுமா? வடமாகாணத் தமிழர்களின் சாதித் துவேஷத்தின் வெளிப்பாடுகள் அகதிகளாக வாழவந்த நாடுகளில் இவர்களிடையே நடக்கும் அசம்பாவிதங்களில் சாதாரணமாகக் காணக்கிடக்கின்றன. வடக்கிலங்கையில் நடக்கும் இனப்படுகொலையினால் பரவலாக மட்டக்களப்புக்குக் குடியேறியிருக்கும் இவர்கள் இதுவரை மட்டக்களப்புத் தமிழரை ஒருபடி குறைவாகவே நடத்தி வந்தமையையும் தோட்டத் தொழிலாளத் தமிழர்களை அதையும் விடக் கீழ்த்தரமாக நடத்தி வந்ததையும் மறுக்க முடியுமா?

நிறவெறியினால் ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழும் காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் நாம் எமது சாதிவெறியை எதிர்காலத்திலாவது மாற்றிக் கொள்ளப் போகிறோமா? அல்லது இதை இனியும் எமது கலாசாரங்களில் ஒன்றாகத் தொடரப் போகிறோமா? 'நியு நாஸி'களின் நிறவெறி நடவடிக்கைகளை எமது சாதிவெறியோடு ஒப்பிடுகையில் ஒரு தெளிவான முடிவுக்கு வரலாம். அதற்கு இதைவிட வேறெது தருணம்.

●

பிரதிவாதி

www.tamilarangam.net



பேரினவாத சிங்கள அரசு தமிழர்களை ஒடுக்குவதற்காக ராணுவத்திற்கும், படைத் தளபாடங்களுக்கும் பலகோடி ரூபாய்களைச் செலவிட்டபடியே, தமிழர்களை அழித்தொழிப்பதிலேயே


தனது காலத்தைக் கழித்துவருகிறது. இவ்வாறு இன அழிப்புச் செய்யவே கடந்த பத்து வருடங்களாக ராணுவக் கட்டியெழுப்பல் நடந்துவருகிறது. இவ்வாறு அரசு தேவையற்ற, மனிதாபிமானமற்ற விதத்தில் நடத்திவரும் யுத்தத்தில் போராளிகளின் தாக்குதல்களால் காயமடைந்த, உடல் ஊனமுற்ற படையினர் 191பேருக்கு செயற்கை உறுப்புகள் பொருத்த 10,018,238 ரூபாய்களைச் செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இன்றுவரை அரசபடைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்கள், குண்டுவீச்சுகள் போன்றவற்றால் பல ஆயிரம் தமிழ் மக்கள் காயமடைந்தும், உடல் ஊனமுற்றும் உள்ளபோதும் இவர்களது சிகிச்சைக்கு ஒரு சதமேனும் அரசு ஒதுக்கவில்லை. ஆனால் இந்த மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினருக்கு பெரும் தொகைகளைச் செலவு செய்கிறது.

இதைவிட தனது ராணுவ நடவடிக்கை மும்முரமாக முடுக்கிவிடப்பட்டுள்ள வடக்கில் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் மாத்திரமன்றி நோய்ப்பட்ட மக்களுக்குத் தேவையான மிக முக்கிய மருந்துகளைக்கூட அனுப்பாது தடை செய்துவரும் அரசு, 'சில காரணங்களைக்' காட்டி யாழ் மருத்துவ பீடத்தையும் மூடிவிட முயற்சி செய்தது.

ஆனால் அண்மையில் இலங்கை சுதந்திரமடைந்த 44வது தினத்தை சகல இன மக்களின் கொண்டாட்டம் எனப் பிரகடனப்படுத்திப் பம்மாத்து விடுகிறது. அரசின் இந்தப் போக்கை அம்பலப்படுத்த சகல தமிழ் மக்களும் உழைப்பதுடன், தமிழ்ப் பிரதேசங்களில் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளால் வாடும் எமது சகோதரர்களுக்கு அனைத்துவித உதவிகளையும் செய்ய முயற்சிப்பது தற்காலத்தில் மிக அவசியமாகும். ●

சேகரன் ●




G. BASYROV



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்